# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஏப்பிரல் 05 2019. இதழ் - 58




அரங்கம் செய்திகள்

விளம்பரங்களுக்கு

071 399 909 1

arangamnews@gmail.com

**சாதித்தது மட்டக்களப்பு மேற்கு: தொடரவேண்டும் சாதனைகள்**

பக்கம் - 07




**5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை!**

பக்கம் - 03



**சிங்களமும் தமிழும் - ஒரு உறவு ஆராய்ச்சி**

பக்கம் -06



**இயக்குனர் மகேந்திரன் மறைந்தார்...**

பக்கம் - 10



# வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவா எதிர்ப்பா? கட்சிகளின் தடுமாற்றம்

( நி. அமிர்தசன் )

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நடப்பு நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்காது விட்டாலும் எதிராக வாக்களிப்பதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஆனாலும் மைத்திரிபால சிறிசேனவுக்கு நெருக்கமான சில உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்ச தரப்புடன் சேர்ந்து வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வலியுறுத்தி வந்தது. இது தொடர்பாக கடந்த வாரம் பல சுற்றுப் பேச்சுக்களும் இடம்பெற்றன.

ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு ஆதரவாகவுள்ள உறுப்பினர்கள் பலர் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்காமல் சபையில் நடுநிலை வகிப்பதாக தீர்மானித்துள்ளனர்.

அவ்வாறு தீர்மானம் எடுத்த உறுப்பினர்களோடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் உரையாடியிருந்தார். ஆனால் அந்த உறுப்பினர்கள் கருத்தை மாற்றவில்லை என்றும் மகிந்த ராஜபக்ச தரப்புடன் இணைந்து செயற்பட முடியாதெனவும் உறுதியாகக் கூறியுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களிப்பதா

தொடர்ச்சி... (பக்கம் -07 )

# ‘புதிய ஆசிரிய ஆலோசகர் சேவை ஏப்ரல் 30க்குள் சாத்தியம்!’ --- கல்வி அமைச்சர்

(காரைதீவு நிருபர் சகா)

புத்தாண்டுடன் இலங்கையிலுள்ள சுமார் 4500 – 5000 வரையிலான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கும் “புதிய சேவை” ஒன்று உருவாக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உறுதியளித்துள்ளார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துடன் புதனன்று இலங்கை ஆசிரியர் ஆலோசகர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் மேற்கொண்ட சந்திப்பில் இந்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

மலைநாட்டு புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் ஏற்பாட்டில் நுவரேலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் சகிதம் மேற்படி தொழிற்சங்கத்தினர் பாராளுமன்றக் கட்டடத்தில் அமைச்சரைச் சந்தித்தனர்.

தூதுக்குழுவில் இலங்கை ஆசிரியர் ஆலோசகர் தொழிற்சங்கச் செயலாளர் ஜி.சமரக்கோன் தமிழ்ப்பிரிவு இணைப்பாளர் எஸ்.பிரபாகரன், நுவரேலியா ஹற்றன் மாவட்ட இணைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது தூதுக்குழுவினர் நியாயமான பல காரணங்களைச் சுட்டிக்காட்டி தமக்கான ஆசிரிய ஆலோசகர் சேவையை அமுல்படுத்தவேண்டும் என கேட்டனர்.

கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பதிலளிக்கையில்; ‘ஆசிரிய ஆலோசகர் சேவைக்கான அமைச்சரவைப் பத்திரம்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மூன்று நிறுவனங்களிடம் இருந்து 100 மெகாவட் மின்சாரத்தை மின்சாரசபை வாங்கவுள்ளது



நாட்டில் உள்ள மின்வெட்டுப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் மூன்று தனியார் நிறுவனங்களிடம் இருந்து இலங்கை மின்சாரசபை 100 மெகாவட்ஸ் மின்சாரத்தை வாங்கவுள்ளது.

அக்ரெக்கோ, வி- பவர், அட்லஸ் ஒல்ட்டனேட்டிவ்ஸ் ஆகிய நிறுவனங்கள் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், வரும் நாட்களில் அதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளன.

தொடர்ச்சி... (பக்கம் -15 )




## மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை முடிவுகளின் தொகுப்பு!

டிசெம்பர் மாதம் நடந்த கபொத சாதாரணதரத் தேர்வு பெறுபேறு சிறிலங்கா தேர்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள நிலையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் மோசமான பெறுபேறுகளைப் பெற்றுள்ளன.

வெளியிடப்பட்ட கபொத சாதாரண தரத் தேர்வு பெறுபேறுகளின் படி, முதல் பத்து இடங்களைப் பிடித்த மாணவர்களின் விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முதல் பத்து இடங்களில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எவரும் இடம்பிடிக்கவில்லை. தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள மாணவர்களே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றனர்.

மாவட்ட ரீதியாக வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில், சராசரி பெறுபேற்றை விட குறைந்தளவிலேயே வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களின் நிலையும் காணப்படுகிறது.

22,910 மாணவர்கள் தேர்வில் தோற்றிய அம்பாறை மாவட்டத்தில் இருந்து, 8163 மாணவர்களே உயர்தர வகுப்புக்குச் செல்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து, 17,126 மாணவர்கள் தேர்வில் தோற்றிய போதும், 6419 மாணவர்களே உயர்தர வகுப்புக்கு தகுதி பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 14,291 மாணவர்கள், தேர்வில் தோற்றிய போதும், 4724 மாணவர்களே உயர்கல்விக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

17,495 மாணவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தேர்வில் தோற்றியிருந்த போதும், 6337 பேரே, உயர்வகுப்புக்குச் செல்லவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 4404 மாணவர்கள் தேர்வில் தோற்றியிருந்தனர். அவர்களில், 1434 பேர் உயர்கல்விக்கு தகுதி பெற்றுள்ளனர்.

தொடர்ச்சி... (பக்கம் -04 )

## கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் 100வீத சித்தி!



(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் இம்முறை க.பொத. சா.தரப்பரீடசைப்பெறுபேறு 100வீத சித்தியை பெற்றிருப்பதாக அதிபர் எம். விஜயகுமாரன் தெரிவித்தார்.

12மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றியதில் 12பேருமே க.பொ.த உயர்தரத்திற்கு தகுதிபெற்றிருப்பதாக அவர் கூறுகிறார்.

சிறந்தபெறுபேறுகளாக தெய்வேந்திரன் தனுஜன் கணேசன் டில்சியா ஆகியோர் 4ஏ 3பி 2சி சித்திகளைப்பெற்றுள்ளனர். எஸ்.பேணுஜா 3ஏ 3பி 3சி சித்திகளைப்பெற்றுள்ளார். வரலாற்றில் பாடரீதியாக கூடுதல் சித்திபெற்றிருப்பது மற்றுமொரு சாதனை என்கிறார்.

விஞ்ஞானப்பாடத்தில் 100வீத சித்தி பெற்றுள்ளனர். அதேவேளை தமிழ் வரலாறு ஆகிய பாடங்களில் 91வீத சித்தியும் கணிதத்தில் 83வீத சித்தியும் ஆங்கிலத்தில் 67வீத சித்தியும் பெறப்பட்டிருக்கிறது.சைவநெறி கத்தோலிக்க சமயத்திலும் 100வீத சித்திபெறப்பட்டிருக்கிறது.

தொகுதிப்பாடங்களைப்பொறுத்தவரை அனைத்துப்பாடங்களிலும் 100வீத சித்தி பெறப்பட்டிருக்கிறது. அதாவது முயற்சியாண்மை நாடகமும் அரங்கியலும் விவசாயஉணவுதொழினுட்பம் தகவல்தொடர்பாடல் தொழினுட்பம் ஆகிய பாடங்களிலே 100வீத சித்தி கிடைக்கப்பெற்றுள்ளது.

## 'சுன்னாகம் மின் உற்பத்தி நிறுவனத்தால் மக்களுக்கு பாதிப்பு'

யாழ்ப்பாணம், சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தினால் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுவதனால் மக்களின் அடிப்படை உரிமை மீறப்படுவதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரியந்த ஜயவர்தன, பிரசன்ன ஜயவர்தன மற்றும் எல்.டீ.பீ தெஹிதெனிய ஆகிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழுவினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த மின் உற்பத்தி நிலையத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 20 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்குமாறு மின் உற்பத்தி நிலையத்தை நடத்திச் சென்ற நொதர்ன் பவர் கம்பனி

தொடர்ச்சி... (பக்கம் -00 )

## மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் 9 ஏ



கடந்த 11 ஆண்டுகளுக்கு பிறகு க.பொ.த சாதாரண பரீட்சையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் சாதிக்க முடியாமல் இருந்த 9A என்னும் பெறுபேற்றை இந்த முறை யுவராஜன்_அபிவர்மன் என்னும் மாணவன் பெற்று சாதித்துள்ளார்.

இதனால் இந்து கல்லூரியாலும் சகல பாடங்களிலும் 9A சித்தியை எட்ட முடியும் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

இவர் கோட்டைமுனை மகா வித்தியாலயமாக இருந்த கல்லூரியை இந்துக் கல்லூரியாக்கிய முன்னாள் அதிபர் திருவாளர் ஐ. சாரங்கபாணி அவர்களின் பேரனும் ஆவார்.

இதன் மூலம் தன் குடும்பத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## காரைதீவில் 9 மாணவர்கள் 9 ஏ சித்திகள்!



(காரைதீவு நிருபர் சகா)

க.பொ.த.சா/த பரீட்சைப் பெறுபேறுகளின்படி காரைதீவுக் கோட்டத்தில் 9 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்றுச்சாதனை படைத்துள்ளனர்.

காரைதீவு இ.கி மிசன் பெண்கள் பாடசாலையில் 8 மாணவிகளும் காரைதீவு சண்முகா மகாவித்தியாலயத்தில் ஒரு மாணவனும் 9 ஏ சித்தி பெற்றுள்ளதாக அதிபர்களான எஸ்.மணிமாறன், ஆர்.ரகுபதி ஆகியோர் தெரிவித்தனர்.

இ.கி.மி.பெண்கள் பாடசாலையில் சகாதேவராஜா டிவானுஜா, லோகநாதன் புவித்திரா, லோகநாதன் வித்யாஷினி, சிவயோகராஜா லக்ஷிகா, இளஞ்செழியன் ரிலக்ஷினி, இரவீந்திரன் திஜஸ்வினி, மேகநாதன் நிலுக்சிகா, விஸ்வலிங்கம் டோமிகா ஆகிய எட்டு மாணவிகள் 9 ஏ சித்திகளைப்பெற்றுள்ளனர்.

இதில் அப்பாடசாலை வரலாற்றில் சாதனையாகக்கருதப்படுகிறது. இதற்கு முன்னர் 5 மாணவிகள் 9 ஏ சித்திபெற்றதே வரலாறு ஆகும். எனவே இம்முறை உச்சக்கட்டச்சாதனையாக 8 மாணவிகள் சித்திபெற்றுள்ளதையிட்டு கல்விச்சமூகம் பாராட்டுகளை தெரிவித்துள்ளது.

இதேவேளை காரைதீவு சண்முகா மகாவித்தியாலயத்தில் மகேந்திரன் குவேந்திரன் என்ற மாணவன் 9 ஏ சித்திப்பெற்றுள்ளார்.

காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் 8ஏ, 1பி என்ற சித்தியை இருமாணவர்கள் பெற்றுள்ளதாக அதிபர் தி.வித்யாராஜன் தெரிவித்தார்.

## பெருமிதம் கொள்ளும் மட்/தளவாய் விக்னேஸ்வரா வித்.

அண்மையில் வெளியான க.பொ.த.(சா.த) பரீட்சையில் இம்முறையும் தமிழ்ப் பாடத்தில் மட்/தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலயம் 100% சித்தியைப் பெற்றுள்ளது. அதேவேளை பாடசாலை வரலாற்றில் கணித பாடத்தில் 100% சித்தியை இம்முறை பெற்றுச் சாதனை படைத்துள்ளது. 14 பேர் தோற்றி 13 பேர் க.பொ.த(உ.த) கற்பதற்குத் தகுதி பெற்றிருப்பது இன்னொரு சிறப்பம்சமாகும். அதிபரின் அர்ப்பணிப்புமிக்க வழிகாட்டல், ஆசிரியர்களின் அயராத உழைப்பு, அக்கறை கொண்டோரின் விழிப்பு மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு முதலியன இந்த வெற்றிக்குப் பின்னணியாக இருக்கின்றன.

அடிக்கடி ஆசிரியர் பற்றாக்குறையைச் சந்திக்கும் இப்பாடசாலை இந்த வெற்றியில் தனித்துப் பெருமிதம் கொள்வதில் தவறில்லை கருத்து, கல்வியுலகில் மேற்கிளம்பியிருப்பதாக அறியக்கிடக்கிறது. இப்படியாகச் சாதனை புரியும் இவ்வித்தியாலயத்தின் ஒரு பகுதி



இப்படியிருப்பதும் கல்வியுலகம் இன்னும் கண்ணை மூடிக்கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

## மட்டக்களப்பில் போதையொழிப்பு வாரத்தில் சிக்கிய சோகுசு வாகனத்தில் கஞ்சா!

மட்டக்களப்பு காவல்துறை தலைமை பிரிவுக்குட்பட்ட பிள்ளையாரடிப்பகுதியில் சொகுசு காரில் கேரளா கஞ்சா கடத்தியவர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்து பெருமளவு கஞ்சாவும் கைப்பற்றியுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

போதையொழிப்பு வாரத்தினை முன்னிட்டு இடம்பெற்ற விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்த போதைப்பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குருணாகல் பகுதியை சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து சுமார் 2 கிலோ கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அத்தோடு கஞ்சா கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட சொகுசு காரும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை!



எங்கள் அப்பா காலத்தில் இருந்தே இந்தப் பரீட்சை இருந்து வந்தது. அவரும் இதில் சித்தியடைந்ததாக(அப்போது அவர் மட்டும்) பெருமைப்பட்டுக்கொண்டதை கேட்டிருக்கிறேன். பெருமை கொள்ளக்கூடிய விடயந்தான். அவர் சித்தியடைந்ததைக் கேட்டு அப்போது பெரும் அந்தஸ்தில் இருந்து கிறிஸ்தவ கல்லூரி ஒன்றின் அதிபரான அருட்தந்தை அப்பாவின் வீட்டுக்கு ஸ்கூட்டரில் வந்துவிட்டாராம் என்று சொல்வார்கள்.

அது அப்போது. இப்போது நிலைமை பெருமளவு மாற்றமடைந்திருக்கிறது. இந்தப் பரீட்சையே பெரும் வேதனை என்பது மாதிரி விமர்சனங்கள் வருமளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது.

அந்தக் காலகட்டங்களில் இந்தப் புலமைப் பரிசில் பரீட்சையை வைப்பதன் மூலம் திறமை உடைய மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தரமான பாடசாலையில் (மகாவித்தியாலயம்?) படிக்க வசதி செய்து கொடுக்கப்படுவது வழக்கம்.

ஆனால், அண்மைக் காலங்களில் இந்தப் பரீட்சை குழந்தையின் பெற்றோருக்கு ஒரு அந்தஸ்துப் போட்டியாக, தனியார் பயிற்சிகளை(ரியூசன்) வழங்குபவர்களுக்கான ஒரு உழைக்கும் சாதனமாக, பிள்ளைகளைப் பொறுத்தவரை பெற்றோரின் அழுத்தம் காரணமாக ஒரு சித்திரவதையாக, அவர்கள் சிறுபராயத்தில் விளையாட்டுப் போன்ற வேறுவிடயங்களில் அக்கறை செய்வதைத் தடுக்கும் ஒரு இடையூறாக மாறிவிட்டிருப்பதாக விமர்சனங்கள் வந்திருக்கின்றன.

இதன் காரணமாக குழந்தைகள் தமது குழந்தைப் பிராயத்தை இழக்கும் நிலைக்கு தள்ளப்படுவதாகவும், அவர்கள்மீது அளவுக்கு அதிகமான சுமை ஏற்றப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு. அதிகாலையிலேயே பெற்றோரால் ரியூசன் வகுப்புகளுக்கு இந்த 5 ஆம் வகுப்பு பிள்ளைகளை கொண்டுபோய் திணிக்கப்படும் நிலையை இது ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் நிர்ணயம் குறித்த விமர்சனங்கள் இருந்த போதிலும் அந்த வெட்டுப்புள்ளிக்கு மேலே குழந்தை பெறாத சந்தர்ப்பத்தில், அதனது குடும்பத்துக்கே அது தோல்வியாகவும், அவர்களுக்கு அது ஒரு அவமானமாகவும் பார்க்கப்படும் அல்லது உணரப்படும் சம்பவங்களை நானே நேரில் பார்த்திருக்கிறேன்.

பரீட்சையின் வினாக்கள் கூட, 5ஆம் ஆண்டு மாணவர்களின் வயதையும் மீறி, கடுமையாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு. ஆனால், இதனைத் தாண்டியும் இதனால் வசதி குறைந்த பிள்ளைகளுக்கு சில வாய்ப்புகள் இருப்பதை மறுப்பதற்கில்லை. வசதி குறைந்த பெற்றோரின் பிள்ளைகள் வெட்டுப்புள்ளிக்கு அதிகமாக புள்ளிகளை பெறும்போது, அவர்களுக்கு கிடைக்கும் உதவித்தொகை அவர்களுக்கு பெருமளவில் உதவும் விடயந்தான்.

அதனைவிட அவரது பாடசாலையில் இருந்து அதனைவிட சிறந்ததாகக் கருதப்படும் ஒரு பாடசாலையில் சென்று படிப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால், “அருகில் உள்ள பாடசாலை: நல்ல பாடசாலை” என்ற கல்வி அமைச்சின் திட்டத்துக்கு இது முரணாகிவிடுமோ என்ற கருத்தையும் மறுப்பதற்கில்லை. ஒரு தூர கிராமத்தில் இருக்கும் பிள்ளைக்கு அங்கேயே நல்ல பாடசாலையை அமைக்கும் அரசாங்க திட்டத்துக்கு முரணாக பிள்ளை நகரப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலையை அணுகுவதை இது ஊக்குவிக்கலாம்.

ஆகவே இந்த புலமைப்பரிசில் பரீட்சைத் திட்டத்தில் சாதகம் - பாதகம் இரண்டும் இருக்கிறது.




முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நாம் அரசியல் ரீதியாக முரண்படுகிறோமா இல்லையா என்பது வேறு விடயம் ஆனால், அவர் இந்தப் புலமைப்பரிசில் திட்டம் குறித்து கூறிய விடயம் கருத்தில் கொள்ளத்தக்கது. இதற்கு ஏதுவான ஒரு மாற்றுத்திட்டத்தை அவர் பரிசீலிக்கக் கோரியுள்ளார்.

இந்தப் பரீட்சையை 5ஆம் வகுப்பில் வைக்காமல் 7 அல்லது 8 ஆம் வகுப்பில் வைக்கலாமா என்பது குறித்த ஆலோசனைகளும் கல்வித்துறைசார் ஆலோசகர்களால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

உண்மையில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று முடிவு எடுக்கக்கூடிய பிரச்சினை அல்ல இது. குழந்தைகளின் கல்வி சம்பந்தப்பட்டது. சாதக பாதகங்களை நிதானமாக ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டியது.

உண்மையில் நிதானமான மாற்றுத்திட்டம் தேவை.

வயதுக்கேற்ற பரீட்சையாக, நல்ல பலன்களை, வாய்ப்புக்களை மாணவர்களுக்கு தரக்கூடிய பரீட்சையாக, உதவி தேவைப்படும் மாணவர்களை சரியாக மட்டிடும் பரீட்சையாக இதனை உறுதி செய்ய வேண்டும்.

பெற்றோரின் அந்தஸ்தை, குடும்ப கௌரவத்தை இணைத்ததாக இது அமைந்துவிடக்கூடாது, தனியார் ரியூசன் முதலைகளின் கைகளில் பிள்ளைகள் அகப்படாதிருப்பதை திட்டம் உறுதி செய்ய வேண்டும்.

முறையாக சாதக பாதகம் ஆராயப்பட்டு மாணவர்களின் எதிர்காலத்துக்கு பாதகம் ஏற்பட்டுவிடாதபடி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

பரீட்சை தேவையா இல்லையா என்பதல்ல இங்கு பிரச்சினை. மாணவர்களுக்கு உதவும் வகையில் அதனை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதுதான் சிந்தனையாக இருக்க வேண்டும்.

**அன்புடன்**

**சீவகன் பூபாலரட்ணம்**

அரங்கம்
செய்திகள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி முழுப்பக்க விளம்பரங்களுக்கு
ரூபாய் பத்தாயிரம் மாத்திரமே!



# சொல்லத் துணிந்தேன்!



**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

கடந்த கால வரலாற்றில் இருந்தும் அனுபவங்களில் இருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்ளாத சமூகம் முன்னேற முடியாது. சுதந்திர இலங்கையில் கடந்த எழுபது வருட காலமாக தமிழரசுக்கட்சி ஊடாகவும் பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி ஊடாகவும் சமகாலத்தில் தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவும் முன்னெடுக்கப்படுகின்ற தமிழர்தம் அரசியல், கிழக்கு மாகாணத்தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்பை வலுப்படுத்தவோ - அவர்களை சமூக பொருளாதார ரீதியாகத் தூக்கிவிடவோ தவறிவிட்டது.

கடந்தகால மற்றும் சமகால தமிழர் அரசியல் தலைமைகளிடம் அதற்கான அர்ப்பணிப்பும் அக்கறையும் ஆற்றலும் ஆளுமையும் அரசியல் வல்லமையும் வேலைத்திட்டமும் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளும் இல்லையென்பதே கிழக்குத்தமிழர்கள் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட சின்னத்துக்கு கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் இயந்திரங்களாகவே மக்கள் இதுவரை வளர்க்கப்பட்டனர். கிழக்கு மாகாணத்தமிழர்களை சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்கின்ற எந்தவிதமான வேலைத்திட்டமோ - தயார்ப்படுத்தல்களோ - தந்திரோபாயங்களோ - கள வேலைகளோ - செயற்பாடுகளோ இல்லாமல் வெறுமனே பாராளுமன்ற உரைகளும் பத்திரிகை அறிக்கைகளும் மாநாட்டுத்தீர்மானங்களும் அழகாக அச்சடிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களும் மட்டுமே தமிழர் அரசியலை காவி வந்துள்ளன.

இதன் காரணமாகக் கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் தமது வாழ்விடங்களையும் -வயற்காணிகளையும்- வணக்கத் தலங்களையும் - பொருளாதாரக் கட்டமைப்புக்களையும் - பண்பாட்டு விழுமியங்களையும் - பல வாழ்வாதார வசதிகளையும் இழந்து, இன்று கிழக்கு மாகாணத்தமிழர் இருப்பே கேள்விக்குறியாக ஆக்கப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் இதுவரை பின்பற்றப்பட்டுவந்த "ஏட்டுச் சுரைக்காய்" அரசியலாகும். இதனை மாற்றாத வரை கிழக்குத் தமிழர்களுக்கு மீட்சி இல்லை. அரசியல் அதிகாரம் இல்லாமல் எதனையும் சாதிக்க முடியாது. வெறுமனே கோரிக்கைகளையும் சித்தாந்தங்களையும் கோஷங்களையும் முன்வைப்பதால் எதுவுமே ஆகப்போவதில்லை. எனவே இதுவரை காலவரையிலான அரசியல் பாதையை மாற்றிப் புதிய தனித்துவமான - காலத்துக்கும் களநிலைகளுக்கு ஏற்ற அரசியல் வியூகத்தினை வகுத்துச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. தேர்தலுக்குத் தேர்தல் ஒரு குறிப்பிட்ட கட்சியிலே ஆட்களை மாற்றுகின்ற அரசியலைக் கைவிட்டு, அரசியலையே மாற்றுகின்ற ஆட்கள்தான் இன்றைய தேவையாக இருக்கின்றது. கிழக்கு மாகாணத் தமிழர்கள் சாதி, மத, பிரதேச, பால், வர்க்க மற்றும் அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தங்களை ஒன்று திரண்ட தனித்துவமான அரசியல் சக்தியாக வெளிப்படுத்தும் போதே இது சாத்தியம். இதன் வெளிப்பாடே தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்னும் அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி ஓராண்டுக்கும் அதிகமாக முனைப்புப் பெற்றுள்ளமையாகும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட பகை முரண்பாடுகளையெல்லாம் களைந்தும் மறந்தும் அனைத்துத் தமிழ் அரசியல்கட்சிகளும் - தேசியக் கட்சிகளில் இணைந்து செயற்படும் அரசியல் செயற்பாட்டாளர்களும் - பொதுமக்கள் அமைப்புக்களும் உட்பட அனைத்துக் கிழக்கு மாகாணத் தமிழர்களும் இந்தக் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள வேண்டும். தனி நபர்களினதும் கட்சிகளினதும் தேர்தல் மைய அரசியலைக் கைவிட்டு மக்கள் மைய அரசியலை நோக்கி மக்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

இன்றைய கிழக்கின் களநிலையைக் கருத்தில் கொண்டு "அழுதும் அவளே பிள்ளை பெற வேண்டும்" என்பதற்கிணங்க கிழக்கு மாகாணத் தமிழர்கள் தங்கள் இருப்பைக் காப்பாற்றித் தக்கவைத்துப் பேணித் தங்களைச் சமூக பொருளாதார அரசியல் மற்றும் கல்வி பண்பாட்டு ரீதியாக வளர்த்தெடுப்பதற்குக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் ஒரே அணியின் கீழ் தனித்துவமான அரசியல் சக்தியாகத் திரண்டு மேற்கிளம்ப வேண்டியது அவசியம். அதன் அடையாளமே கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு.

# மட்டு மாநகர சபை

## உள்ளூராட்சி மன்றங்களும் பொது நூலக சேவையும்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

அபிவிருத்தி என்பது கட்டுமான வேலைகளுக்குமப்பால் அறிவுசார் விருத்தியிலும் தங்கியுள்ளது. எனவேதான உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள சேவைகளில் மிக முக்கியமான சேவையாக பொதுநூலக சேவை அமைகின்றது. வாசிப்பதன் மூலம் தனி மனித பொழுதுபோக்கு வசதியை ஏற்படுத்துவதும், ஒவ்வொருவரதும் அறிவுத் தேவையை ஈடுசெய்து, அதன்மூலம் பிரதேசத்தின் மனிதவள ஆளுமை விருத்திக்குப் பங்களிப்பதுமாக இந்தப் பொதுநூலக சேவை அமைகின்றது. ஒரு உள்ளூராட்சி மன்றம் வளங்களோடுகூடிய பொது நூலகமொன்றைக் கொண்டிருக்குமாயின் அந்த உள்ளூராட்சி மன்றம் பிரபல்யமானதும் தனித்துவமானதுமாக அமைவதுடன், அதன் சேவை ஏனைய உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களுக்கும் வியாபிப்பதாக அமையும்.

குறித்த பிரதேசத்தின் முறைசார்ந்த அல்லது முறைசாராக் கல்வி விருத்தியில் பொதுநூலகங்களின் பங்கு கணிசமானதாகும். நூலகங்களைப் பயன்படுத்தி மேன்மையான நிலையை அடைந்தவர்கள் பலர். தத்தமது அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்யுமிடமாக பொது நூலகங்கள் அமைகின்றன. எனவே உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் நூலக சேவையை வழங்குவது அவசியமாகும்.

இன்று புத்தக வாசிப்புப் பழக்கம் அருகிவரும் நிலையில் நூலக சேவை வாசகர்களுக்குப் பொருத்தமான வகையில் மாற்றமுறுதல் தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக இலத்திரனியல் நூலக சேவை, கணனிமயப்படுத்தப்பட்ட நூலகக் கட்டமைப்பு, வலைத்தளமூடான அணுகும் வசதி, ஒலிப்பதிவுக் களஞ்சியங்கள் போன்ற விடயங்களை புத்தாக்க சிந்தனையுடன் அறிமுகம் செய்வது காலத்தின் தேவையாகும்.

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் கீழ் இயங்கும் சகல பொது நூலகங்களினதும் நூலகசேவையை விரிவாக்கும்பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சி.பிரகாஷ் அவர்கள் புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார். அதிலோன்றாக ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் சகல நூலகங்களுக்கும் நூல்களை வழங்கும் நிகழ்வு கடந்த 26.03.2019 அன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி.பிரகாஷ் தலைமையில் மட்டக்களப்பு 'உள்ளூர் ஆளுகை வள நிலையத்தில்' நடைபெற்றது. இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் திரு.கா.சித்திரவேல் அவர்கள் அதிதியாகக் கலந்துகொண்டு நூல்களை வழங்கிவைத்தார். ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தின் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சிச் திட்ட இணைப்பாளர் திரு. அன்டன் நல்லதம்பி அவர்கள் ஆசியா பவுண்டேசன் நிறுவனம் சார்பில் இந் நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தார். மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து அதன் கௌரவ தவிசாளர்கள், செயலாளர்கள் மற்றும் நூலக பொறுப்பாளர்கள் வருகை தந்து இந்த நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் ஒவ்வொரு பொது நூலகங்களும் வாசிப்பதற்கான வளங்களை



அதிகரித்து, தமது நூலக சேவையை விரிவாக்குவதுடன் உள்ளூராட்சியின் தனித்துவமான சேவையான நூலக சேவையை மேம்படுத்தக் கூடியதாக அமைந்திருந்தது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பொது நூலகங்களுக்கு நூல்களை அன்பளிப்புச் செய்த ஆசியா பவுண்டேசன் நிறுவனத்திற்கு மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சி.பிரகாஷ் நன்றி தெரிவித்தார்.

தொடர்ச்சி...

# மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை முடிவுகளின் தொகுப்பு!

மன்னார் மாவட்டத்தில் இருந்து 3638 மாணவர்கள் தேர்வில் தோற்றிய போதும், 1321 மாணவர்களே உயர்கல்வி கற்கும் வாய்ப்பை பெறவுள்ளனர்.

3494 மாணவர்கள் தேர்வில் தோற்றிய முல்லைத்தீவு மாவட்டத்தில், 1246 மாணவர்களே உயர்வகுப்புக்குச் செல்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் இருந்து 5143 மாவர்கள் தேர்வில் தோற்றியிருந்தனர். இவர்களில் 1129 பேர் மாத்திரமே உயர்கல்விக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கபொத சாதாரண தர தேர்வில் இம்முறை – நாடளாவிய ரீதியாக சராசரியாக 71.66 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 64.4 சதவீதமும், மட்டக்களப்பு மாவட்டத்தில், 62.51 சதவீதமும், திருகோணமலை மாவட்டத்தில், 53.17 சதவீதமும் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 67.02 சதவீதமும், கிளிநொச்சி மாவட்டத்தில் 54.3 சதவீதமும், மன்னார் மாவட்டத்தில் 69.34 சதவீதமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 60.4 சதவீதமும், வவுனியா மாவட்டத்தில் 68.28 சதவீதமும், மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாவட்ட ரீதியான தேர்ச்சி வீத அடிப்படையில் 25 மாவட்டங்களிலும், கடைசி இடத்தை திருகோணமலை மாவட்டமும், அதற்கு முந்திய 24 ஆவது இடத்தை கிளிநொச்சி மாவட்டமும் பெற்றுள்ளன.

தேசிய அளவிலான சராசரி தேர்ச்சி வீதத்தை விட (71.66), அதிகமான தேர்ச்சி வீதத்தை ஏனைய பகுதிகளில் உள்ள 8 மாவட்டங்கள் கொண்டிருக்கின்ற போதும், வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களும் சராசரி நிலையை விடக் கீழேயே இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பட்டறிவு

## சிங்கள ஓலைச்சுவடிகளை டென்மார்க்குக்கு கடத்திச் சென்ற "ரஸ்மஸ்ரஸ்க்"

என்.சரவணன்




சிங்கள எழுத்துருவத்துக்கு நிலையான நவீன வடிவம் கொடுத்தது டச்சுக் காரர்களே. அதுபோல சிங்கள மொழியின் இலக்கணத்தை ஒழுங்குபடுத்தி வெளியிட்டு அதனை அடுத்த கட்டத்துக்கான ஆரம்பத்தை ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள். சிங்கள மொழியும், எழுத்துக்களும் எதன் வழி வந்தன என்பது பற்றியும் பல்வேறு ஆய்வாளர்கள் 17-18ஆம் நூற்றாண்டுகளிலேயே ஆராய ஆரம்பித்துவிட்டனர்.

சிங்கள மொழியானது திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தது என்கிற கருத்தாக்கம் மேலெழுந்திருந்த காலத்தில் அதை மறுத்து; சிங்கள மொழியானது இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்கிற ஆய்வுகளை வெளியிட்டவர்களில் முக்கியமானவர்கள் ரஸ்முஸ் ரஸ்க் (Rasmus Rask - 1787- 1832), வில்ஹைம் கைகர் (Wilhelm Geiger 1856-1943).

இவர்களில் வில்ஹைம் கைகர் பற்றி நாமறிவோம். மகாவம்சத்தை மொழிபெயர்த்தது மட்டுமன்றி அது குறித்த முக்கிய ஆய்வை வெளியிட்டவர். ஆனால் ரஸ்முஸ் குறித்து நாம் அதிகம் அறிந்திருக்கமாட்டோம்.

டென்மார்க்கில் பிறந்த ரஸ்முஸ் பழைய நோர்வேகிய மொழி, ஐஸ்லாந்து மொழி ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டார். ஐஸ்லாந்து எழுத்துவடிவத்தை நூர்டிக் நாட்டு மொழிக்குடும்ப எழுத்துக்களுடன் ஆராய்ந்து ஒழுங்குக்கு கொண்டு வந்த பெருமையும் ரஸ்முஸ் ஐச் சாரும். ஆங்கிலம், டேனிஷ், சுவீடிஷ், ரஷ்யா, ஜேர்மன், டச்சு, லத்தீன், கிரீக், ஹீப்ரோ, பிரெஞ்சு, சாமிஸ்க், போலிஷ், செக்கொசுலோவேக்கிய, இத்தாலி, ஸ்பானிஷ் போன்ற மொழிகளில் சிறந்த ஆளுமையைப் பெற்றார். டென்மார்க் மொழியின் உச்சரிப்பை மேலும் எளிமைப்படுத்திய அறிஞராக போற்றப்படுகிறார் ரஸ்க்.

1811 இல் அவர் "Introduction to the Icelandic or Old Norse Language" (ஐஸ்லாந்து, பழைய நோர்வேஜிய மொழிக்கான அறிமுகம்) என்கிற முதல் நூலை வெளியிட்டார். 1815 இல் பண்டைய நோர்வேஜிய மொழி பற்றி எழுதிய ஒரு கட்டுரைக்காக டென்மார்க் விஞ்ஞான காலத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


இந்த மொழி ஆய்வுகளின் மீதான அவரின் ஆர்வம் ஆசிய மொழிகளின்பால் ஈர்த்தது. குறிப்பாக இந்தியாவில் சம்ஸ்கிருத மொழியையும் அதனோடு தொடர்புடைய மொழிக்குடும்பத்தையும் பற்றி ஆராய முடிவு செய்து இந்தியாவுக்கு 1820இல் கிளம்பினார். இந்தியாவில் பல்வேறு இடங்களுக்கு சென்று தனது ஆராய்ச்சியை தொடர்ந்தபடி இலங்கை வந்தடைந்தார். அவர் மெட்ராசில் இருக்கும் போதே மூன்றே மாதத்தில் சிங்களத்தைக் கற்றுக்கொள்ள முடிந்தது என்கிறார் பிரபல தொல்பொருள் ஆய்வாளரும் தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமான சார்ல்ஸ் கொடகும்புர. அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய மொழியில் இந்திய மொழி சத்தங்கள் குறித்து ஒரு ஆய்வை ஆங்கிலத்தில் வெளியிட்டார்.

அதுபோல அவர் 1821 இல் வெளியிட்ட 'சிங்கள மொழி எழுத்துக்கள்" (Singalesisk Skriftlaere) என்கிற நூல் மிகவும் முக்கியமான ஆய்வாக அமைந்தது. அது முதலில் டேனிஷ் மொழியில் தான் வெளியிடப்பட்டது. இதை அவர் தனது சொந்த செலவில் வெளியிட்டார். பின்னர் ஆங்கிலத்துக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டது. சிங்கள மொழி குறித்து ஐரோப்பிய மொழியில் வெளிவந்த முதல் நூலாக இது கருதப்படுகிறது. சிங்கள எழுத்துக்கள், சொற்கள், அதன் இலக்கண அமைப்புமுறை என்பன பற்றி அதுவரை ஒரு ஒழுங்கான நூல் வெளிவந்ததில்லை என்றே கூறலாம். இந்த நூல் அதன் பின் வந்த ஆய்வுகளுக்கெல்லாம் ஒரு முன்னோடி.

இந்த நூலுக்காக ரஸ்க் சேகரித்த பலநூற்றுக்கணக்கான சிங்கள ஓலைச்சுவடிகளை அவர் 1823ஆம் ஆண்டு டென்மார்க்குக்கு திரும்பிச் செல்லும் போது கையோடு கொண்டு சென்று விட்டார். இந்த ஓலைச்சுவடிகள் இன்னமும் கொப்பன்ஹேகன் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஓலைச்சுவடிகளை பட்டியல்படுத்துவதற்காக கொடகும்புர அழைக்கப்பட்டு அந்தப் பணிகள் முடிக்கப்பட்டது குறித்தும் கொடகும்புர எழுதியிருக்கிறார். மேலும் இந்த ஓலைச்சுவடிகளே ஐரோப்பாவில் இருக்கும் மிகப்பழமையான சிங்கள ஓலைச்சுவடிகளாக இருக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

கொடகும்புர பட்டியலிட்டுக்கொடுத்த ஓலைச்சுவடிகள் பற்றிய தகவல்கள் 416 பக்கங்களில் கொப்பன்ஹேகன் நூலகம் 1980இல் வெளியிட்டிருக்கிறது. இந்த நூலை அதன் இணையத்தளத்திலும் முழுமையாக பார்வையிட முடிகிறது.

சிங்கள ஓலைச்சுவடிகளாக சேகரிக்கப்பட்டவற்றில் சிங்களம், சமஸ்கிருதம், பாளி, எலு போன்ற மொழிகளில் எழுதப்பட்டிருக்கிறது. ரஸ்க் கொண்டு சென்ற ஓலைச்சுவடிகளில் இலங்கையின் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட முக்கிய பதிவுகளும், இலக்கியங்களும் உள்ளடங்கியுள்ளதாக தெரிகிறது. குறிப்பாக பூஜாவலிய, தூபவன்சம் போன்றவற்றின் பகுதிகளும் இன்னும் பல சிங்கள காப்பியங்களும் அடங்கும்.



ரஸ்க் இலங்கையில் இருந்து மட்டுமல்ல இந்தியா உள்ளிட்ட இன்னும் பல நாட்டு ஓலைச்சுவடிகளையும் இவ்வாறு கொண்டு போய் சேர்த்திருக்கிறார். உதாரணத்திற்கு கொப்பன்ஹேகன் நூலகத்திலுள்ள சமஸ்கிருத ஓலைச்சுவடிகளின் எண்ணிக்கை 1127, சிங்கள ஓலைச்சுவடிகள் 152, தமிழ் ஒளிச்சுவடிகள் 97.

டென்மார்க்குக்கு சிங்கள மொழி பரிச்சயம் ஏற்கெனவே உண்டு. எப்படி என்றால் 1604 - 1635 காலப்பகுதியில் கண்டியை ஆண்ட மன்னன் சேனரத் டென்மார்க்குக்கு சென்று டேனிஷ் கிழக்கிந்திய கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றிருந்தார். 1618 இல் ஒரு ஒப்பந்தத்தையும் அவர் அங்கு கைச்சாத்திட்டிருந்தார்.

ரஸ்க் இலங்கையில் இருந்த காலத்தில் தென்னிலங்கையில் இருந்த பிக்குமார்களை அணுகி சிங்கள - ஆங்கில அகராதியின் அவசியத்தை வலியுறுத்தியது குறித்து கொடகும்புர தனது நூலில் விபரிக்கிறார்.

ரஸ்க் கடத்திச் சென்ற இலங்கையின் புராதன ஓலைச்சுவடிகள் பற்றி சிங்கள அறிஞர்கள் ஆதங்கப்படுவதைவிட அவற்றைக் கொண்டு ரஸ்க் ஆற்றிய புலமைத்துவ வெளிப்பாடுகளை போற்றுகின்றனர். ரஸ்க் தனது 44ஆவது வயதில் கொப்பன்ஹேகனில் இறந்துபோனார். ஆனால் அவர் வாழ்ந்த குறுகிய காலத்தில் அவர் ஆற்றிய பாத்திரம் மலைக்கத்தக்கது. இன்றும் அவரை ஸ்கண்டிநேவிய நாடுகள் கொண்டாடுகின்றன. கொப்பன்ஹேகனில் உள்ள அவரது கல்லறையில் அரபு, பழைய நோர்வேகிய மொழி, சமஸ்கிருதம், டெனிஸ் போன்ற மொழிகளில் எழுதப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

---

## அவனொரு தொடர்கதை

'நூறு ரூபாய் கொடுடா'
கேட்பது கடனென்றாலும்
அவனிடம் கேட்கும்போது
வெட்கப்படமாட்டீர்கள்
முக்கியமாய் வாங்கிய கடனில்
முக்கால்வாசியைத் திருப்பிக்
கொடுத்துமிருக்கமாட்டீர்கள்

கவலையாக இருந்தால்,
தண்ணியடிச்சா எல்லாம்
சரியாகப்போயிடும்
என்று பொய் சொல்லியே
சமாதானப்படுத்தியிருப்பான்

அவன் பைக்கை கடன் வாங்கி
ஓடினாலும் உங்கள்
சொந்த பைக் ஓடுவதுபோலவே
உணர்ந்திருப்பீர்கள்

உங்கள் அம்மாவுக்கு
சுகமில்லை என்றவுடன் அவன்
அம்மாவுக்கு வருத்தம் வந்ததுபோல
கவலைப்பட்டிருப்பான்

உங்கள் தங்கச்சி
அவனையும் அண்ணா என்றே
அன்புடன் பழகியிருப்பாள்

அந்தத் தறுதலையோடு
சேராதே என்று
உங்கள் ஆசிரியரும்
அடிக்கடி உங்களுக்கு
திட்டி இருப்பார்

அவனோடு சேர்துதான்
நீயும் கெட்டுப்போய்விட்டாய்
என்று
அடிக்கடி திட்டினாலும்
அவன் வந்தால்
உங்களுக்கு முன் அவனுக்குத்தான்
சாப்பாட்டுத்தட்டை
நீட்டியிருப்பாள் அம்மா

உன் தங்கச்சிமேல்
வைத்திருக்கும்
பாசத்தை அவன்
காதலிமேல் நீயும்
அவன் தங்கச்சிமேல்
வைத்திருக்கும் பாசத்தை
உன் காதலிமேல்
அவனும்
வைத்திருந்திருப்பீர்கள்

என்ன கஸ்டம் வந்தாலும்
மனசில் முதல் வருவது
அவனாகத்தான் இருக்கும்

இப்படியொருவன்
உங்கள்
வாழ்க்கையில் இல்லாவிட்டால்
நீங்கள் இன்னும்
வாழவில்லை...!

--- சிவஞானம் சிவச்சந்திரன் ---

தாத்தா, ஐயா, நங்கி, மல்லி என்ற சொற்களைக் கேட்டதுமே அவை சிங்கள மொழிச் சொற்கள் என்று சொல்வீர்கள். ஆனால் இந்தச் சொற்களுக்கும் தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று உங்களுக்குத் தெரியுமா?

சரி, தமிழில் உறவுமுறைப் பெயர்கள் எப்படி உருவாகின? அதற்கும் சிங்கள உறவுமுறைப் பெயர்களுக்கும் என்ன தொடர்பு? தமிழன் மட்டுமே ஆதிமனிதன் என்ற குறுகிய பார்வையோடு வாசிக்காமல், ஆனால் ஆதி மனித வாழ்வு வழிவழியாக தொடர்கின்ற தொல்சமூகங்களில் ஒருவர் தமிழர் என்ற தெளிவுடன் இனி வாசியுங்கள்.

ஒரு மொழியை நாம் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தினாலும், அதன் வாழ்நாள் மிக நீண்டது. பொ.பி 21ஆம் நூற்றாண்டைக் கடந்துகொண்டிருக்கும் நம் ஒவ்வொருவரதும் அறுபது - எழுபது ஆண்டுகள் என்பது, நாம் பேசுகின்ற ஒரு மொழிக்கு வெறும் கணப்பொழுது மட்டுமே. அதன் ஆதியொலி எப்போது வந்தது என்பது நம் யாருக்கும் தெரியாது.

’எலு’ என்று அறியப்படும் ஒரு திராவிட மொழியும் பாளி மொழியும் கலந்து உருவான மொழி தான் சிங்களம். இன்று அது தன்னை ஒரு இந்தோ ஆரிய மொழியாகவே இனங்காட்டிக்கொள்கிறது. எலு திராவிட மொழி என்பதை சிங்கள மொழியியல் அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்றாலும், எலுவே சிங்களத்தின் மூலமொழி என்பதை அவர்களும் மறுப்பதில்லை. சிங்களத்தில் விளங்கிய சமஸ்கிருதச் சொற்களை அகற்றி எலு மொழிச் சொற்களை பயன்படுத்தவேண்டும் எனும் நோக்கத்துடன் 1940களில் முனிதாச குமாரதுங்கவால் ஆரம்பிக்கப்பட்ட தனிச்சிங்கள இயக்கம் ’’ஹெல ஹவுல" (எலு இயக்கம்) என்று தான் அறியப்பட்டது.இப்படி ஹெலு மொழியின் அடிப்படை இருப்பதாலும், சிங்களவருக்கும் தமிழகத்தவருக்கும் மரபியல் தொடர்பு இருப்பதாலும், சிங்களத்தில் பல தமிழ்ச் சொற்கள் இருப்பதை இன்றும் காணமுடிகின்றது.

சரி, தமிழில் உறவுமுறைப் பெயர்கள் எப்படி உருவாகின? அதற்கும் சிங்கள உறவுமுறைப் பெயர்களுக்கும் என்ன தொடர்பு? தமிழன் மட்டுமே ஆதிமனிதன் என்ற குறுகிய பார்வையோடு வாசிக்காமல், ஆனால் ஆதி மனித வாழ்வு வழிவழியாக தொடர்கின்ற தொல்சமூகங்களில் ஒருவர் தமிழர் என்ற தெளிவுடன் இனி வாசியுங்கள்.

காட்டுமிராண்டிகளாக மனிதன் உலவிய போது, அந்த குழு மட்டுமே ஒரு சமூகமாக இயங்கியது. அதில் உறவுமுறை எதுவும் இருக்கவில்லை. எல்லோரும் ஒரே குடும்பம். எல்லோரும் எல்லோருக்கும் கணவனாகவும், மனைவியாகவும், குழந்தைகளாகவும் இருந்தார்கள். கட்டற்ற அந்த சமூகத்தில் முதலில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் கலவி தடை செய்யப்பட்டபோது, "தந்தை, தாய், மகன், மகள்" எனும் உறவுகள் உருவாகி வந்தன.

பின், சகோதரர்களுக்கிடையே கலவி தடைசெய்யப்பட்டது. "அண்ணன், அக்கை, தம்பி, தங்கை" என்ற உறவுகள் உருவாகி வந்தன. பெற்றோரில் ஒருவர் இல்லாத போது, தாய்வழியில் தாயின் சகோதரியும், தந்தை வழியில் தந்தையின் சகோதரனும் பிள்ளைகளைக் கவனிக்கத்தொடங்கிய போது, சின்னம்மை - பெரியம்மை, சிற்றப்பன் - பெரியப்பன் என்ற உறவுகள் தோன்றின.

தாயின் சகோதரனும், தந்தையின் சகோதரியும் முக்கியத்துவம் பெற்ற சமூகங்களில் மாமன் - அத்தை எனும் உறவுகள் தோற்றம் பெற்றன.

# சிங்களமும் தமிழும் - ஒரு உறவு ஆராய்ச்சி

இந்த உறவுகளின் வளர்ச்சி இப்படி இரண்டு பந்திகளைத் தட்டச்சும் இடைவெளியில் ஏற்பட்டு விடவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகள் எடுத்ததாக மானுடவியல் - சமூகவியல் கோட்பாடுகள் உரிமைகோரும் நீண்ட செயன்முறைகள் இவை!

தமிழின் சிறப்பே, இந்த எல்லா உறவுகளும் தோன்றிய தடயங்களை தன் வசம் சேமித்து வைத்திருப்பது தான். இதை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள உறவுகளுக்கான தமிழ் விளிப்புகளை பார்க்கலாம்.

அகர முதல எழுத்து என்று போற்றுவது தமிழ் மரபு. அ என்பது தான் இயற்கையான எழுத்து. ’அ’வில் ஆரம்பிக்கும் சொற்களே தமிழிலும் அதிகம். எனவே ’அ’வில் ஆரம்பிக்கும் உறவு விளிச் சொற்கள் தான்

வி.துலாஞ்சனன்

இயல்பாக உருவாகியிருக்க வேண்டும். அவற்றிலிருந்து மூன்று தனித்தனி விதமாக தமிழ் உறவு விளிச்சொற்கள் உருவாகி இருப்பதை நம்மால் உணரமுடிகின்றது.

| உறவு | ஒத்த விளிச்சொற்கள் |
|---|---|
| அம்மா | தாய், ஆய், யாய், அன்னை,அஞ்ஞை, அத்தாள், அக்கை, அவ்வை, ஆச்சி, ஆயி, ஆத்தை, தல்லி, தள்ளை, தத்தை, தவ்வை, மோய், மொவ்வை. |
| அப்பா | அப்பன், அப்பு, தகப்பன், அந்தை, ஆந்தை, தந்தை, அத்தன், அச்சன், அப்பிச்சன், அப்பன், ஆஞா, ஐயன்,தாதை, தமப்பன், ஆயான். |
| மகன் | மைந்தன், இளவல், காதலன், எச்சம், சிறுவன், செல்வன், சேய், பாலன், மதலை, தோன்றல், மகவு, மதலை,குமரன். |
| மகள் | ஐயை, ஏயை, குமரி, சிறுமி, சிறுவி, செல்வி, காதலி, பிள்ளை, பெண் |
| அண்ணா | ஐயன், தமையன், மூத்தோன், தன்னை, தம்முன், அண்ணல், முத்தன், மூத்தன், முன்னோன், தலைவன். |
| அக்கா | அக்காள், அக்கை, அக்கன், தமக்கை, அத்தி, அன்னை, தத்தை, ஆத்தை, தவ்வை, அவ்வை, முன்னை, முன்னாள். |
| தம்பி | அம்பி, பின்னோன், இளவல், இளைஞன், பிற்கால், பின்னன், இளை. |
| தங்கை | இளைச்சி, இளையாள், பின்னி, கையை, நங்கை. |

ஏனைய உறவுகளை இப்போது விட்டுவிடுவோம். ஆனால், இந்த உறவுமுறைப் பெயர்களை மீண்டுமொரு முறை வாசித்துப்பாருங்கள். ஒரே பெயரை இரு இடங்களில் அதிகம் காண்பீர்கள்.

ஆம், அப்பாவையும் அண்ணாவையும் அழைக்க ஒரே பெயர்கள் பயன்பட்டிருக்கின்றன. அம்மாவையும் அக்காவையும் அழைக்க ஒரே பெயர்கள் பயன்பட்டிருக்கின்றன. காரணம் மிக எளிது. தந்தை இல்லாத குடும்பங்களில் இன்றும் மூத்த மகனே தலைமகன். தாய் இல்லாத குடும்பங்களில் மூத்த மகளே தாய்க்குத் தாயாய் இருந்து இளைய சகோதரர்களை வளர்ப்பாள்.

இன்னொரு சுவையான தகவல் என்னவென்றால், காதலன், காதலி என்ற சொற்கள் பழந்தமிழில் மகன், மகளையும் குறிக்கும் என்பது தான். கந்தபுராணம் ஓரிடத்தில் "தீயின் காதலன்" என்று முருகனைப் பாடும். உடனே உன்னை நெருப்பு என்கிறான் பார் என்று வள்ளியையோ தெய்வானையையோ சண்டைக்கு கூட்டிக்கொண்டு வந்து விடாதீர்கள். இங்கு சொல்லப்படும் காதலன் என்பது மகன் என்ற பொருளில். தீப்பொறியில் பிறந்த முருகன் தீயின் மகன். தீயின் காதலன்.

இந்தச் சொற்கள் எப்படின் உருவாகின, ஏன் உருவாகின என்பதெல்லாம் விரிவான வேர்ச்சொல்லாய்வுக்கு உரியவை. அதெல்லாம் நமக்கு இப்போது தேவையற்றவை. ஆனால் முக்கியமான ஒரு ஆய்வை நாம் பார்ப்பது அவசியம்.

எப்படி என்றால், ’அ’வில் ஆரம்பிக்கும் இயல்பான ஒரு உறவுமுறைச் சொல்லுக்கு ’தம்’, அல்லது ’எம்’ அல்லது ’நம்’ எனும் முன்னொட்டைக் கூட்டி அழைப்பது வழக்கமாக இருந்திருக்கிறது.

தம் + ஆய் = தாய்.
தம் + அந்தை = தந்தை
தம் + அக்கை = தமக்கை
தம் + ஐயன் = தமையன்
தம்+ பின் = தம்பி
தம்+அங்கை = தங்கை
எம் + அந்தை = எந்தை
என் + ஐ = என்னை

இதில் ஏனைய எல்லா அகர வரிசை உறவுச்சொற்களும் தமிழில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆனால் அங்கை என்ற சொல் தங்கை என்ற பொருளில் ஆளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அதுவே தங்கை என்பதன் வேர் என்பது இந்த வேர்ப்பெயராய்வில் தெரியவருகின்றது.

சரி. இனி இந்த வரிசையில் வரும் நம் என்ற சொல் கொஞ்சம் வித்தியாசமானது. உதாரணமாகச் சொல்லப்போனால், ’எம் இல்லம்’ என்றால் கூறுபவரின் வீடு குறிப்பிடப்படுகிறது. ஆனால் ’நம் இல்லம்’ என்றால் கூறுபவரும் கூறுவதைக் கேட்பவரும் ஒன்றாக வாழும் வீடு என்று பொருள். இலங்கைத்தமிழில் இன்றும் ’நம்’ என்பது தன்மை - முன்னிலை உரிமைப்பொருளாகவே பயன்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக, மரியாதைக்குரிய ஒருவரை, பொதுவான உறவு கூறி "நம்" முன்னொட்டு சேர்த்து அழைத்த போது கீழ்வரும் பெயர்கள் உருவாக வாய்ப்புகள் உண்டு.

நம்+ஆச்சி = நாச்சி
நம்+ஆயன் = நாயன்
நம்+பின் = நம்பி
நம்+ அங்கை = நங்கை
நம்+ அக்கன் = நக்கன்

இதில் என்ன சிக்கல் என்றால், இந்த நம் முன்னொட்டுச் சேர்த்த எந்தவொரு சொல்லும் நேரடியாக தமிழ் இலக்கியத்தில் உறவுப்பெயர்களாக வழங்கப்படவில்லை. தமிழ் இலக்கியங்களில் நம்பி, நங்கை என்ற இரு சொற்களும் இளம் வயதுடைய, பலராலும் மதிக்கப்படுகின்றவர்களைக் குறிப்பிடவே பயன்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் நங்கை என்பது மருமகளை அழைக்கப் பயன்பட்டிருக்கிறது. சில இடங்களில் அண்ணியையும் குறிக்கப் பயன்பட்டிருக்கிறது. ஊன்றிப் பார்த்தால் அது குலமகள் அல்லது சீமாட்டி என்ற பொருளிலேயே அதிகம் பயன்பட்டிருக்கிறது என்பதைக் காணலாம்.

சோழர் காலக்கல்வெட்டுக்களில் தேவரடியார்கள் ’நக்கன்’ என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அது நம்பி, நங்கை போல ’நம்+ அக்கன்’ என்பதன் புணர்ச்சி என்று கருதும் அறிஞர்கள் இருக்கிறார்கள். தேவரடியார்கள் மதிப்பு வாய்ந்த சமூக அந்தஸ்தில் விளங்கிய போது அப்படி அக்கையின் இடத்தில் வைத்து போற்றப்பட்டிருக்க வாய்ப்பு இல்லாமலில்லை.

’நாச்சி’ என்ற சொல்லும் இப்படியே ’நம்+ஆச்சி’ என்ற பொருளிலேயே வந்திருக்க வேண்டும். தகப்பனைக் குறிக்கும் ஆயன் நம்முடன் இணைந்து, ’நம்+ஆயன்’ = நாயன் என்றாகி, தலைவனையும் குறிக்கப் பயன்பட்டிருக்கலாம். சைவ அடியவர்களை ’நாயன்மார்’ என்றும் வைணவ அடியார்களை ’ஆள்வார்’ என்றும் அழைக்கும் வழக்கம், அவர்கள் இறைவனையே ஆண்ட தலைவர்கள் என்ற பொருளிலேயே என்பாரும் உண்டு. (ஆள்வார், ஆழ்வார் ஆனது பிற்கால வழக்கு.)

சரி, தமிழில் உறவு விளிப்பு ஆராய்ச்சி போதும் என்று கருதுகிறேன். சிங்கள உறவு விளிப்புகளுக்கும், தமிழ் உறவு விளிப்புகளுக்குமான தொடர்பு என்ன? இவற்றில் துவ, புத்தா என்பன நேரடியான வடமொழிச் சொற்கள். முறையே துஹித்ர், புத்ர என்பனவற்றின் பாலி வடிவங்களான தீது, புத்த என்பன சிங்களத்தில் துவ, புத்தா

| தமிழ் | சிங்களம் |
|---|---|
| தாய் | அம்மா |
| தந்தை | தாத்தா |
| மகள் | துவ |
| மகன் | புத்தா |
| அண்ணன் | ஐயா |
| தமக்கை | அக்கா |
| தம்பி | மல்லி |
| தங்கை | நங்கி |

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## சாதித்தது மட்டக்களப்பு மேற்கு : தொடரவேண்டும் சாதனைகள்

'என்னடா தம்பி கிருஸ்ணா கிழக்கு மாகாணம் அண்மையில் வெளியாகிய கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் கடைசி நிலையை அடைந்திருக்காமே! மாறி மாறி தமிழ்பேசுகின்றவர்கள் வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டுக்கும் யார் கடைசியா வாற என்ற போட்டிதான் நடக்குது போலத் தெரியுது. போன 2017ல், கல்விப்பொதுத்தராதர சாதாரணதரத்தில் சித்தியடைந்து, உயர்தரத்திற்கு தெரிவான மாணவர்களின் மாகாண ரீதியான தரப்படுத்தலில் வடக்கு மாகாணம் கடைசி, கிழக்கு மாகாணம் கடைசிக்கு முதல். இப்போ அண்மையில் வெளியாகிய 2018ம் ஆண்டிற்கான பரீட்சைபெறுபேற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணம் கடைசி, வடக்கு மாகாணம் கடைசிக்கு முதல் இருவருக்கும் தான் போட்டி நடக்குதுபோல தெரியுது. முன்னுக்கு வருவதற்கான முயற்சியை காணோம் போல' எனக் கூறிய பாலசுந்தரம். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பெறுபேற்றினையும் பேச ஆரம்பித்தான்.




படுவான்கரைக்கென ஒரு கல்வி வலயமொன்று வேணுமென்று நினைச்சுதுபோல, கல்வி வலயமொன்றை ஆரம்பித்து வைத்தார்கள். ஆரம்பித்ததில் இருந்து 8வது வருடமாக கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். புதிய வலயம் ஆரம்பிக்க வேண்டும் என ஆரம்பித்தாலும், ஆசிரியர்களை தேடியெடுப்பதில் பெரும்பாடப்போச்சு. இப்பவும் ஆசிரியர் பற்றாக்குறை வலயத்தில் நிலவுகின்றதுதான். ஆனாலும் கடந்த காலங்களைப்போலல்லாது மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் சாதித்துக்கொண்டே வருகின்றது. ஆரம்பித்த காலகட்டங்களில் வலயம் கடைசி நிலையில் இருப்பதாக அனைவரும் கூறுவார்கள்.

அப்போது கேட்கவே கவலையாகவிருக்கும். இந்நிலை, எப்போ மாறும்? என்ற எதிர்பார்ப்பு என்னிடத்திலிருந்தது. என்று கூறிய பாலசுந்தரம். அந்த எதிர்பார்ப்பு விரைவாக நடக்க வேண்டும் எனவும் எண்ணினேன்.

ஆனாலும் ஒரிரு வருடங்களுள் சிறந்தபெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடியாதுவிட்டாலும், 7வது வருடம் பெற்றுக்கொள்ள முடிந்தமை மிகவும் சந்தோசத்தினை கொடுத்தது. 2016ம் ஆண்டு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 98வலயங்களில் 98வது இடமென அனைவரும் பேசிக்கொண்டனர். ஆனால் அப்பேச்சு நிலைக்கவில்லை. 2017ம் ஆண்டு பரீட்சைப்பெறுபேறு இவற்றினை மாற்றியமைத்தது. 99 வலயங்களில் 93வது இடத்திற்கு சென்றது.

6 வலயங்களைப் பின்தள்ளி மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் முன்னுக்கு சென்றமையென்பது மிகவும் மகிழ்ச்சிதான். சாதனையும்தான். ஆனாலும் வலயத்தில் 9ஏ சித்திகள் பெறப்படவில்லையென்ற கவலை எல்லோரிடத்திலும் இருந்தது. அதேநேரம் 93வது இடத்திலிருந்து இறங்கிவிடக்கூடாது. முன்னிலையையே அடையவேண்டுமென்ற வைராக்கியமும் படுவான்கரை மக்களின் கல்வியில் அக்கறையுள்ளவர்களின் மனதில் ஏற்பட்டன. என்ற விடயத்தை பாலசுந்தரமும் கூறி முடிக்க. கிருஸ்ணனும் தன் பேச்சை ஆரம்பித்தான்.

அண்மையில் கல்விப்பொதுத்தராதரப் சாதாரணதரப்பரீட்சை பெறுபேறு வெளியாகப் போகின்றது. என்று கேள்விப்பட்டதும் நித்திரையே இல்லை. ஒருநாள் இரவு கண்விழித்திருந்தும் பெறுபேறு வெளியாகவில்லை.

அடுத்தநாள் காலையில் வெளியாகும் என எதிர்பார்த்தும் அன்றிரவே வெளியாகியது. வெளியாகியதும், நம்மட மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் யாராவது, 9ஏ எடுத்திருக்காங்களா? என்று தேட ஆரம்பித்தேன், கன்னன்குடா பாடசாலையில் படித்த இரு பிள்ளைகள் 9ஏ சித்திகளைப்பெற்றுள்ளதாக கூறினார்கள் கேட்டதும் மிகவும் மகிழ்ச்சிகொண்டேன். கடந்த 2017ல் எதிர்ப்பார்த்த சாதனை 2018ல் கிடைத்திருக்கின்றதே என்ற மனமகிழ்ச்சியில், வலயம் எத்தனையாவது, இடத்தினை இலங்கையூராகவும் உள்ள கல்வி வலயங்களின் தரப்படுத்தலில் இடம்பிடித்திருக்கின்றது என்பதனை பார்க்கவேண்டும் என்ற அவாவில் தேடுதல்களை மேற்கொண்டேன்.

அப்போதுதான் கடுக்காமுனை பாடசாலை 100வீத சித்தியினைப் பெற்றிருக்கின்றதாம் என்ற செய்தியும் காதில் பதிந்தது. அளவற்ற மகிழ்ச்சியும் கொண்டேன். இவ்வாறு இருக்கையில்தான், பரீட்சை திணைக்களத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்ட பகுப்பாய்வும் கிடைக்கப்பெற்றது. இதனடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் கடந்த 2017ல் 93வது இடத்தினைப் பெற்றிருந்ததுடன், 2018பெறுபேற்றின் அடிப்படையில் 91வது இடத்தினைப்பெற்றிருக்கின்றது என்ற செய்தி கிடைத்தது.

இதுவும் இரட்டிப்பு மகிழ்ச்சியை கொடுத்தது. எடுத்தவுடன் பாய்வதைவிட மெதுமெதுவாக பாய்ந்து கீழே விழாதளவில் தொங்கலில் நிற்பதுதான் சாலச்சிறப்பு. அந்த நிலையை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் அடையவேண்டும். இருக்கும் நிலையில் இருந்து இறங்கிவிடக்கூடாதென்பதே எமது எண்ணம்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் அமைந்துள்ள கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகள் சகல வசதிகளையும், சிறந்த பெறுபேறுகளையும் பெற்று எல்லோரும் விரும்பும் வலயமாக மாறவேண்டும். மாற்றியமைக்க வேண்டும். இல்லாதுபோனால் மட்டக்களப்பு மேற்கை காப்பாற்ற கடவுள்தான் வரவேண்டும் எனக்கூறிய கிருஸ்ணன் எழுவானை நோக்கி விரைந்தான்.

**படுவான் பாலகன்**

---

தொடர்ச்சி...

## வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவா எதிர்ப்பா?

ஆதரவாக வாக்களிப்பதா என்று இதுவரை முடிவு செய்யவில்லை. ஆனாலும் எதிராக வாக்களிக்க வேண்டுமென கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

எனினும் அரசியல் காரணங்களினால் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டுமென இராசம்பந்தன் கேட்டுள்ளார் என்றும் இதனால் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் சில உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது வெளியேறிச் செல்வார்கள் எனவும் கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெள்ளத்தில் சிக்கி மரத்தில் குழந்தை பெற்ற தாய்



*இடாய் சூறாவளி காரணமாக மத்திய மொசாம்பிக்கில் வெள்ளத்தில் இருந்து தப்பி, மாமரத்தில் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்திருக்கிறார்.*

அமெலியா என்ற அந்தப் பெண் தனியாக வாழ்கிறார். கர்ப்பிணியாக இருந்த அவர் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டபோது தனது இரண்டு வயது மகனுடன் மாமரத்தின் கிளை ஒன்றை பற்றிக்கொண்டார். அந்தக் கிளை மீதே தனது பெண் குழந்தை சாராவை ஈன்றெடுத்தார்.

இரண்டு நாள்கள் கழித்து அக்கம்பக்கத்தினர் அக்குடும்பத்தை மீட்டனர். இந்த சூறாவளியில் 700-க்கும் அதிகமானோர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

இதே போன்றதொரு அதிசயத்தக்க நிகழ்வு 20 ஆண்டுகளுக்கு முன் தெற்கு மொசாம்பிக்கில் நடந்தது. அப்போது வெள்ளத்தில் சிக்கிய பெண் ஒருவர் ஒரு மரத்தில் தனது குழந்தையைப் பெற்றெடுத்தார்.

ரோசிதா மபியாங்கோ எனப் பெயரிடப்பட்ட அந்த குழந்தை பிறந்த 20 ஆண்டுகள் கழித்து சாராவும் மரத்தில் பிறந்திருக்கிறார்.

"நான் என்னுடைய இரண்டு வயது மகனுடன் வீட்டில் இருந்தேன், திடீரென தண்ணீர் எங்கள் வீட்டுக்குள் புகுந்தது. எனக்கு வேறு வழியே இல்லை. அதனால் மரத்தில் ஏறிவிட்டேன். அங்கே எனது மகனுடன் தனியாக இருந்தேன்," என ஐநாவின் குழந்தைகள் முகமையான யுனிசெஃப்பிடம் அமெலியா தெரிவித்திருக்கிறார்.

அமெலியாவும் அவரது இரண்டு குழந்தைகளும் தற்போது பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். நல்ல உடல்நிலையுடன் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய திரைப்பட தினம்

தேசிய திரைப்படத் தினமாக ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் சஜித் பிரேமதாசவின் பணிப்புரைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கை திரைப்படத் துறையின் முன்னோடியான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிசின் 100 ஆவது ஜனன தினத்திற்கு அமைவாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management:
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson



# ‘தலைக்கு மேலே சூரியன் – ஆனால் அச்சம் வேண்டாம்’

சூரியன் இலங்கைக்கு மேலாக போகும் காலம் இது. ஆகவே இந்தக் காலப்பகுதியில் இங்கு வெப்பநிலை மிகவும் அதிகமாகக் காணப்படும் என்று கூறும் மட்டக்களப்பு வானிலை ஆய்வு நிலைய அதிகாரியான சூரியகுமார் ஆனால், இது வருடா வருடம் நடக்கும் நிகழ்வு என்றும் அதனைப்பற்றி பெரும் கவலை கொள்ளத்தேவையில்லை என்றும் கூறுகிறார்.

சூரியன் இலங்கைக்கு மேலாக ஒரு வருடத்திற்கு இரு முறை அதி உச்சம் கொடுக்கிறது. இந்நிகழ்வு வருடாவருடம் நடைபெறும் வழக்கமான ஒன்றுதான்.

ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் தென் அரைக்கோளப் பக்கமிருந்து வட அரைக்கோளப் பக்கமாக வடக்கு நோக்கியும், செப்ரம்பர் மாதமளவில் வட அரைக் கோளப்பக்கமிருந்து தென் அரைக்கோளப்பக்கமாக தெற்கு நோக்கியும் சூரியன் நகர்கின்றது.

இக் காலப்பகுதிகளில் சூரியன் இலங்கைக்கு மேல் அதிஉச்சம் கொடுக்கும். தற்போது ஏப்ரல் 5 ம் திகதி முதல் 15 ம் திகதி வரை இலங்கைக்கு மேலாகக் காணப்படும்.

இந்தக்காலங்களில் வெப்பநிலை மிகவும் அதிகமாக இருக்கும் என்று கூறும் சூரியகுமார், அதேவேளை, சில நாட்களில் கோடை மழையாக மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய நிலையும் ஏற்படும் என்று தெரிவித்தார்.

பகல் வேளையில் பெரும் வெப்பம் காணப்படும் என்பதால், பூமியில் உள்ள நீர்நிலைகளில் உள்ள நீர் ஆவியாகி மேலே செல்லும். ஆகவே அவை இரவில் மழையாகப் பெய்யும் வாய்ப்பு உருவாகும் என்கிறார் அவர். இருந்தபோதிலும் சில ஊடகங்களில் இதனை ஒரு பெருத்த மோசமான காலநிலை, அதனால், பெரும் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிப்பது போலக் கருதி. நாம் பயப்படத் தேவையில்லை என்றும் அவர் “அரங்கம்” பத்திரிகைக்கு கூறினார்.

இவை வருடா வருடம் ஏற்படும் நிகழ்வுதான் என்றும் மக்கள் மன அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.



# ஆபாசப்படத்தால் அழிவுகள்?

மருத்துவர் சிவஞானம் சிவச்சந்திரன்

"கணவன் மனைவி சேர்ந்து ஆபாச படம் பார்ப்பது சரியா? தவறா? பார்ப்பதனால் இருவருக்குமான உறவில் ஏதும் சிக்கல் வர வாய்ப்பு உண்டா?"

இப்படி ஒரு கேள்வி பலதரப்பிடம் இருக்கிறது.

பாலியல் சம்பந்தமான கேள்விகள் நிறைய வரும். பொதுவெளியில் எழுதினால் செக்ஸ் டொக்டர் என்று முத்திரைகுத்தி விடுவார்கள் என்று பயந்து எழுதுவதில்லை. நிறையப்பேர் கேட்கிற கேள்வி என்பதால் இது பற்றி எழுதலாமென்று நினைக்கிறேன்.

இப்படியான விநோதமான சிந்தனைகள் ஆண்களுக்கு வருவதுண்டு. அண்மையில் ஒரு பெண் தன்னுடைய கணவர் இன்னொரு பெண்ணையும் சேர்த்து த்ரிசம் எனப்படும் மூவர் சேர்ந்து உறவில் ஈடுபட சம்மதிக்குமாறு கட்டாயப்படுத்துவதாக ஆலோசனை கேட்டிருந்தார்.

செக்ஸ் படங்கள் பார்ப்பது நல்லதா கெட்டதா என்ற ஆராய்ச்சியெல்லாம் வேண்டாம், ஆனால் ஒவ்வொருவரும் அந்தப்படங்கள் வெறும் நடிப்பு என்பதை உணரவேண்டும்.

அவை பலமுறை நிறுத்தப்பட்டு, நிறுத்தப்பட்டு படமாக்கப்படுபவை. அதனால் அந்த படங்களில் நடைபெறுபவையெல்லாம் நிஜத்தில் சாத்தியமில்லை என்பதை உணரவேண்டும்.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் வெளியான ஒரு அறிக்கையின்படி, ஆண்கள் செக்ஸ் படங்கள் பார்த்துவிட்டு அதை நிஜ வாழ்க்கையில் முயல்வதால் பெண்கள் பாதிக்கப்படுவது அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறிப்பாக இயற்கைக்குப் புறம்பான உறவில் ஈடுபட முயற்சித்ததால் நிறையப்பெண்கள் மலம்போவதில் சிக்கல் ஏற்பட்டு, வயிற்றிலே துளைபோட்டு பைகளில் மலம் கழிக்கவேண்டிய கொடுமை அதிகரித்துள்ளதாம்.



அடுத்து, சில படங்கள் “ரேப்” போன்ற வன்முறைகளைக் கொண்டிருப்பதால், அதைப்பார்பவர்களும் அதைச்செய்ய தூண்டப்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதால் அவ்வாறான படங்களைத் தவிர்ப்பதும் முக்கியம்.

**மனைவியோடு சேர்ந்து பார்ப்பது?**

அது மனைவியின் மன நிலையைப் பொறுத்தது. அநேகமான பெண்களுக்கு தங்கள் கணவன் தன்னைமட்டுமே ரசிக்கவேண்டும் என்ற பொசசிவ்னெஸ் அதிகமாகவே இருக்கின்றது. அவ்வாறான மனநிலையில் இருக்கும் மனைவியால் தன் கணவன் டீவியில் இன்னொரு பெண்ணின் நிர்வாணத்தை ரசிக்கிறான் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல் ஆண்கள் ஒரு பெண்ணை ரசிப்பதுபோல் பெண்களால் வெறுமனே படத்தில் நிர்வாணமாக வரும் ஒரு ஆணை ரசிக்கமுடியாது. ஒரு பெண் ஆணை ரசிக்க நிர்வாணம் தாண்டி நிறையவிடயம் தேவை.

ஒரு கணவன் ஆசைப்பட்டுக் கேட்டுவிட்டான், கணவன் இன்னொரு பெண்ணிடம் சென்று விடக்கூடாது என்று கடமைக்காக விருப்பமில்லாமலேயே இவ்வாறான விடயங்களுக்கு மனைவிகள் ஒத்துக்கொள்ளலாம். நீண்ட கால அடிப்படையில் அது மனைவியின் மனதில் உறுத்தலாக இருக்கும். ஆகவே பாலியல் சம்பந்தமான எந்தவொரு வித்தியாசமான ஆசை வந்தாலும் அது சம்பந்தமாக மனைவியுடன் மனம் திறந்து பேசி அவளின் உணர்வுகளை அறிந்துகொள்வது கட்டாயம்.

மாறாக, புருசன் ஆசைப்பட்டால் மனைவி ஒத்துக்கொள்ளத்தான் வேண்டுமென்ற நிலையில் செய்யப்படும் எந்தச்செயலும் நீண்டகால அடிப்படையில் நல்ல குடும்பவாழ்வு நிலைத்திருப்பதைப் பாதிக்கும் என்பதை ஒவ்வொரு ஆணும் புரிந்துகொள்ள வேண்டும்.

# இயக்குனர் மகேந்திரன் மறைந்தார்...



மகேந்திரனைத் தவிர வேறு சில தமிழ்நாட்டுத் திரைப்பட இயக்குனர்களும் வன்னி வந்து சென்ற போதும் தன் மக்களுக்கு சினிமா கற்றுக் கொடுக்கவும் தன்னுடன் சினிமா பற்றி உரையாடவும் ஏன் இயக்குனர் மகேந்திரனைத் தேர்ந்தெடுத்தார் பிரபாகரன்? தமிழ்நாட்டில் தமிழ் உணர்வுள்ள, விடுதலைப்புலிகளை ஆதரிக்கின்ற இன்னும் பல இயக்குனர்கள் இருந்தும் நம் நாட்டு இயக்குனர் பாலுமகேந்திரா இருந்தும் அவர் ஏன் இயக்குனர் மகேந்திரனை வன்னிக்கு வரவழைத்தார்?

## அறம்!

பிரபாகரன் சினிமாவை நேசித்தார் என்பது உண்மைதான். ஆனால் அறத்தைப் பேணும் சினிமாக்களையே அவர் நேசித்தார். அத்தகைய படங்களை இயக்கும் இயக்குனர்களையே மதித்தார். அவர்களே தன் மக்களுக்கு உதாரண புருசர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருக்க வேண்டும் என விரும்பினார். அவர் இயக்குனர் மகேந்திரனைத் தேர்ந்தெடுக்கக் காரணம் இந்த அறம்தான்.

இங்கு நான் அறம் எனக் கூறும் போது அது விஷன், தொலைநோக்கு, அணுகுமுறை, கொள்கை என்வற்றைக் குறிக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

மகேந்திரன் அவர்கள் வன்னியில் இருந்து திரும்பிய பின்னர் விடுதலைப்புலிகளின் தலைவருடனான சந்திப்பின் போது தாங்கள் பேசிக் கொண்ட விடயங்களைச் சொல்லும் போது, 'உங்கள் முள்ளும் மலரும் படத்தின் கிளைமாக்ஸ் எனக்கு மிகவும் பிடித்திருந்தது' எனத் தலைவர் தன்னிடம் சொன்னதாகச் சொல்கிறார். உண்மையில் அந்தக் கிளைமாக்ஸ் தலைவருக்குப் பிடிக்கக் காரணம் என்ன?

பலரும் அந்த முடிவுக்காட்சியை அண்ணன் தங்கை சென்டிமென்ட்டுக்கூடாகப் பார்ப்பதுண்டு. ஆனால் உண்மை அதுவல்ல. அது மக்கள் சக்தியின் பலத்தைக் காட்டும் ஒரு உன்னதமான, எளிமையான கிளைமாக்ஸ். அதனாற்தான் அது தலைவரின் மனதில் அவ்வளவு தூரம் பதிந்துள்ளது. பொதுவாக தமிழ்ச் சினிமாப் பண்பாட்டில் மக்கள் பார்வையாளர்களாக இருப்பார்கள். ஹீரோக்கள் அவர்களுக்காக சண்டையிட்டு வெல்வார்கள். மகேந்திரன் அவர்களுடைய படங்களில் அது எதிர்மாறாக இருக்கும். ஹீரோ மக்களால் தோற்கடிக்கப்படுவான் அல்லது திருத்தப்படுவான். முள்ளும் மலரும் படத்தில் மக்கள் வெல்கிறார்கள். ஹீரோ (ரஜனிகாந்) விழுந்தாலும் மீசையில் மண் முட்டாதவன் போல் நடந்து கொள்கிறான்.

இயக்குனர் மகேந்திரன் அவர்கள் ஹீரோயிசத்தை வளர்த்தவர் அல்ல. அவர் மக்கள் சக்தியை வெல்ல வைப்பார். உதிரிப்பூக்கள் படத்தில் மக்கள் சக்தியின் பலம் இன்னொரு பரிமாணத்தில் காட்டப்படுவதைப் பார்க்கலாம். அங்கு மக்கள்தான் அதர்மத்துக்குத் தண்டனை வழங்குகிறார்கள்.

இயக்குனர் மகேந்திரன் அவர்களிடம் தலைவருக்குப் பிடித்த இன்னொரு அறம், பெண்கள் சார்ந்து தனது படைப்புகளில் அவர் கடைப்பிடிக்கிற அணுகுமுறையாகும். இயக்குனர் மகேந்திரன் எப்பவும் பெண்களை பலமானவர்களாகவும் ஆண்களைவிடவும் நிதானமானவர்களாவும் நீதியானவர்

**விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஏன் இயக்குனர் மகேந்திரனைத் தேர்ந்தெடுத்தார்?**

களாகவும் சித்திரிப்பார். முள்ளும் மலரும் படத்தில் மங்கா பாத்திரத்தின் ஊடாக இதை அற்புதமாகச் செய்வார். உதிரிப்பூக்களில் வரும் 4 பெண் பாத்திரங்களுமே ஏதோ ஒரு வகையில் பெண்களை மேன்மைப்படுத்துபவர்களாகத்தான் இருக்கின்றனர். நெஞ்சத்தைக் கிள்ளாதேயில் ஒரு படி மேலே போய் ஆண்களை மதிலில் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டும் போறவாற பெண்களை கேலி செய்தபடியும் இருக்கும் வெட்டிப் பசங்களாகவும் அவர்களை திருத்தும் ஒரு நிதானமான தைரியமான ஆளுமையாக பெண்ணையும் காட்டுவார். அதிலும் அந்தப் பெண் ஒரு புற்றுநோய் நோயாளி என்பது பெண்கள் எவ்வளவு துன்பங்களை தமக்குள் அடக்கி வைத்திருக்கிறாள் என்பதற்கான குறியீடு ஆகும். தமிழ்ச் சினிமாக்கள் பெண்களை கொச்சைப்படுத்துவதையும் அவர்களை சந்தைப் பண்டங்களாக பாவிப்பதையும் இன்னமும் நிறுத்தாத சூழலில் மகேந்திரன் 70களிலேயே பெண்களை மேன்மைப்படுத்துவதை அறமாக கொண்டிருந்தார்.

அதனாற்தான் பிரபாகரன் 'தமிழ்நாட்டு சினிமாக்காரர்களிடம் சொல்லுங்கள் பெண்களைக் கொச்சைப்படுத்தி படம் எடுப்பதை நிறுத்தச் சொல்லி' என்னும் தன் கோரிக்கையை இயக்குனர் மகேந்திரனிடம் முன் வைத்தார். ஏனெனில் அதைச் சொல்லவதற்கு மிகவும் தகுதியானவர் இயக்குனர் மகேந்திரன்தான்.

தன் படைப்புகளில் மட்டுமின்றி தன் சொந்த வாழ்க்கையிலும் பெண்களை மதிப்பவர் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர் இயக்குனர் மகேந்திரன் அவர்கள். அது மட்டுமின்றி 'ஒரு படைப்பாளிக்கு ஆரோக்கியமான உடலும் கூர்மையான மனமும் இருக்க வேண்டும்' எனச் சொல்பவர் மகேந்திரன் அவர்கள்; அதன் வழி நடப்பவர்.

உண்மையில் பிரபாகரன் நீண்ட நேரம் மனம்விட்டுப் பேசுவதற்கும் ஒன்றாக உணவருந்துவதற்கும் இயக்குனர் மகேந்திரன் தகுதியுடையவரானதற்கு அவருடைய இத்தகைய ஒழுக்கங்கள் பிரதான காரணங்களாகும். அவ்வாறான ஒழுக்கம் அற்றவர்களுக்கு அருகில் அமர்வதற்கும் அவர்களுடன் நீண்ட நேரத்தைச் செலவழிப்பதற்கும் தலைவர் பிரபாகரன் போன்ற ஒரு ஆளுமைக்கு உடலும் மனமும் கூசும் என்பதே யதார்த்தம்.

தன் படைப்புகளில் மட்டுமின்றி சினிமா தயாரிப்பு முறைமையிலும் அறத்தைக் கடைப்பிடித்தவர் இயக்குனர் மகேந்திரன். நிதர்சனம் தயாரிப்பில் உருவான ஆணிவேர் என்னும் படத்தை இயக்குனர் மகேந்திரனின் மகன் ஜான் மகேந்திரன் இயக்கியிருந்தார். அந்தப் படத்தில் ஆஸ்பத்திரியில் நோயாளர் வார்ட் இல் ஒரு காட்சி. அதற்காக புலிகளின் வைத்தியப் பிரிவை நாடியுள்ளனர். அவர்களும் காட்சி தத்ரூபமாக வர வேண்டும் என்பதற்காக வலு மகிழ்ச்சியாக தங்கள் ஆஸ்பத்திரியில் நோயாளர் தங்கியிருக்கும் ஒரு வார்ட்டை படப்பிடிப்புக்கு வழங்கும் ஏற்பாட்டில் வேகமாக இறங்கினர். இதனைக் கண்ட ஜோன் அவர்கள் உடனடியாக அந்த ஏற்பாட்டைத் தடுத்தி நிறுத்தினார். அவர் சொன்ன காரணம், 'நோயாளிகளை தொந்தரவு செய்வது சினிமா தர்மம் அல்ல. இப்படி நான் செய்து அதை அப்பா அறிந்தால் அவர் என்னைக் கொன்று போடுவார்'. அதன் பின்னர் டம்மி வார்ட் ஒன்று அவர்களுக்கு தயார் செய்து கொடுக்கப்பட்டது. காட்சி தத்ரூபமாக வரவேண்டும் என்பதற்காக மேற்கத்தைய படப்பிடிப்பாளர்கள் கூட இத்தகைய தவறுகளை எங்கள் நாடுகளில் வந்து செய்வதை நான் கண்டுள்ளேன். (தங்கள் நாடுகளில் செய்ய சட்டம் அனுமதிக்காது). இந்நிலையில் ஒரு தமிழ்நாட்டு இயக்குனரிடம் இத்தகைய அறம் இருப்பது என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

A Film By என்னும் தங்கள் பெயருக்கு முன்னால் எழுதும் பழக்கம் இன்னமும் தொடர்கிறது. அப்படிப் போடுவது அறம் அல்ல இப்ப அது நாகரிகமும் அல்ல என்று எமது இயக்குனர்கள் பலருக்கு நான் அப்பப்போ சொல்லவதுண்டு. ஆனால் அதை யாரும் கருத்தில் கொள்ளவதில்லை. A Film By என்று தம் பெயரைப் போடுவதில் அப்படியொரு மோகம் பலருக்கு. உண்மையில் அதன் அர்த்தம் அந்தப் படத்தின் சொந்தக்காரன் அதன் இயக்குனர் என்பதாகும். பாலுமகேந்திரா கூட இந்த A Film By என்னும் போடும் பழக்கத்தை கடைசிவரை கைவிடவில்லை என்பதும்

ஞானதாஸ் காசிநாதர்

எனக்கு ஆச்சரியம்தான். தன்னுடைய படங்களின் அதிகமான பணிகளை அவரே செய்வதால் அவர் அப்படிப் போடுவதற்குத் தகுதியானவராக இருக்கக் கூடும். ஆனால் மகேந்திரன் அவர்கள் 70களிலேயே அந்த செற்பிரயோகத்தை ஒரு போதும் பயன்படுத்தவில்லை. அவர் அதை வெறுத்தார். அத்தகையை உரிமை கோரலுக்கு எதிராகவும் இருந்தார். அதற்கு அவர் சொல்லும் விளக்கம், 'என் படங்களில் 'A Film by Mahendran ' என்று நான் போடுவதில்லை. நல்ல ஒளிப்பதிவாளர், நல்ல நடிகர்கள், நல்ல படத்தொகுப்பாளர் போன்றோர் அமைந்தால்தான் கதைக்கு ஏற்ற சரியான மனநிலையை ஏற்படுத்திப் பார்வையாளர்களைக் கதைக்குள் இழுக்க முடியும். இத்தனை பேர் உழைப்பும் இருந்து அந்தப் படத்தை எப்படி நான் என்னுடைய படமாக மட்டும் சொந்தம் கொண்டாடிக்கொள்ள முடியும்?'

எல்லாவற்றுக்கும் மேல் தனது படங்களின் வர்த்தக வெற்றிகாக இயக்குனர் மகேந்திரன் அவர்கள் தன்னுடைய அறங்களை ஒரு போது விட்டுக் கொடுத்ததுமில்லை சமரசம் செய்து கொண்டதுமில்லை. உண்மையில் இதுதான் அவரை ஒரு சிறந்த திரைக்கதை எழுத்தாளர், இயக்குனர் ஆக்கியது என்று நான் சொல்வேன். வர்த்தக நோக்கத்துக்காக நடைமுறையில் உள்ள விடயங்களைப் பின்பற்றுபவர்கள் தமது படைப்பற்றாலைக் கூர்மைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இயக்குர் மகேந்திரன் அவர்களுக்கு தம் படைபாற்றலைக் தொடர்ந்து கூர்மைபடுத்த வேண்டிய அவசியம் இருந்தது. நடைமுறையில் இருந்து மாறுபட்டு தன் அறங்களைச் சமரசம் செய்யாது எப்படி மக்களிடம் தன் படைப்புகளை சென்யறடையச் செய்வது என்று அவர் நிறைய சிந்திக்க வேண்டியிருந்தது. செயற்பட வேண்டியிருந்தது. அதில் அவர் வெற்றியும் பெற்றார். அதனடிப்படையிற்தான் சொல்கிறேன் அவரே தமிழ்நாட்டின் சிறந்த திரைக்கதை எழுத்தாளர் மற்றும் இயக்குனர்.

உடனடி வெற்றிகள் மட்டும் அல்ல, சினிமா உள்ளவரை நீடித்திருக்கக்கூடி வெற்றிகளை அவர் அடைந்தார். அந்த அடிப்படையிற்தான் விடுதலைப்புலிகலின் தலைவர் தனது மக்கள் இயக்குனர் மகேந்திரனிடமிருந்து சினிமாவைக் கற்றுக் கொள்ள வேண்டும் என விரும்பினார்.

# தீரனியன் – ஒரு பார்வை




1747 ஆம் ஆண்டில் ஒரு நல்ல குளிர்காலம். இடம் ஸ்கொட்லாந்து (Scotland). உடலை உறையவைக்கும் குளிர் ஊசியாய் துளைத்துக் கொண்டிருந்தது. அத்தனை குளிரிலும் அந்த நீதிமன்றம் நிறைந்திருந்தது. இந்த விநோத வழக்கை இதற்கு முதல் யாரும் பார்த்ததில்லை.

முப்பத்தைந்து வயது மனிதனை முன்னிறுத்திய வழக்கு அது. இவன் திருமண உறவுக்கு பொருத்தமில்லாதவன் என்று ஹக் ப்ளேர் எனும் அம்மனிதனைக் காட்டி வாதிட்டார் வழக்கறிஞர். அவனிடமிருந்து பதிலை எதிர்பார்த்துத் திரும்பிய நீதிபதிக்கோ அவன் நடவடிக்கைகள் ஆச்சரியமளித்தன. அவன் எங்கோ பார்த்துக்கொண்டு கைகளை மேலும் கீழும் காற்றில் அலைவது போல் அசைத்துக் கொண்டிருந்தான். நீதிபதி அவனைப் பார்த்துக் கேட்டதை அப்படியே எதிரொலி போல மீண்டும் கேட்டான். நீதிபதி கோபங்கொண்டு அவனை அதட்டினார். அதனையும் திரும்பச் சொன்னான். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். மிகவும் புதியவனாய் தெரிந்த அவன் எல்லோருக்கும் கேலிக்கூத்தானான் அன்று.

1797. இடம் பிரான்ஸ். டாக்டர் ஜீன் மார்க் காஸ்பார்ட் (Dr.Jean Marc Gaspard) நோயாளிகளைக் கவனிக்க தன் வீட்டைப் பூட்டிவிட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தார். அப்போது பன்னிரண்டு வயதுள்ள ஒரு சிறுவனை அவரிடம் கூட்டி வந்தார்கள் சிலர். காட்டில் மரம் வெட்டச் சென்ற போது ஆபத்தினை உணராது தனித்துத் திரிந்து கொண்டிருந்தான். இவனுக்கு தன் பெயர் கூடச் சொல்லத் தெரியவில்லை என்றனர். டாக்டர் அவனுக்கு விக்டர் எனும் பெயரிட்டு அன்றிலிருந்து அவனைக் கண்காணித்து வந்தார். ஒரு இனம்புரியாத சத்தம் மட்டும் அவனிடமிருந்து வந்தது. ஒரே விதமான செயலையே திரும்பத் திரும்பச் செய்து வந்தான். பார்வை தவிர்த்தான். அதுவரை கண்டிராத ஒரு புதிராகவே இருந்தான் விக்டர்.

இப்படி, அரிதாக அறியப்பட்ட இந்நடவடிக்கை கொண்ட மனிதர்களை அத்துடன் மறந்தும் போனார்கள். ஆனால் வரலாறு இவர்களை பதிவு செய்யத் தவறவில்லை. 1943 அமெரிக்காவில், அழகிய பூந்தோட்டத்தில் மலர்களுடன் மலர்களாய் வளைய வந்த குழந்தைகளை, சற்றுத் தள்ளி அமர்ந்துகொண்டு கண்காணித்துக் கொண்டிருந்தார் டாக்டர் லியோ கேனர் (Dr.Leo Kanner).

சற்று பதற்றத்துடன் ஒரு சிறுமி ஓடி வந்து, அவரருகே இருந்த மேசையில் கலைந்து கிடந்த குறிப்பேடுகளை அடுக்கிவிட்டுச் சென்றாள். ஒரு சிறுவன் ஏதோ பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே அவரைத் தாண்டிச் சென்றான். கடந்த பல மாதங்களாக கவனித்துவரும் இந்த பதினொரு குழந்தைகளுள் மூன்று பேர் சிறுமிகள். ஒரு முடிவுக்கு வந்தவராய் லியோ கேனர் தன் எண்ணங்களை எழுத்தாய் மாற்ற ஆரம்பித்தார்.

1944 இடம் ஜெர்மன், வியர்னா பல்கலைக்கழக மருத்துவமனையில் பொது மருத்துவர், ஹேன்ஸ் அஸ்பேர்ஜர் (Dr.Hans Asperger) தன் உதவி மருத்துவருடன் தீவிர ஆலோசனையில் இருந்தார். ஜெர்மனில் நிலைமை மிக மோசமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை. ஹிட்லர் அரசால் கூட்டம் கூட்டமாக மக்கள் கொல்லப்பட்டு நாடே கொலைக் களமாக இருந்தது. இரண்டாம் உலகப்போர் அது. எங்கு பார்த்தாலும் மரண ஓலம், குண்டடிபட்டு கொத்துக் கொத்தாக நோயாளிகள் அரச மருத்துவ மனைகளுக்கு தூக்கி

பா. யூடி ரமேஸ் ஜெயகுமார்.
அருட் சகோ. வி. மரியதாஸ்.

வரப்பட்டார்கள். ஆனாலும் அஸ்பெர்ஜர் மனம் தளரவில்லை. தன் வேலை மற்றும் சிந்தனையில் குறிக்கோளுடன் செயற்பட்டார். அத்தனை நாட்களாக தான் செய்த ஆய்வறிக்கையை சமர்ப்பிப்பதில் முனைப்புடன் செயற்பட்டார். அதனை சித்திரம் போன்ற தன் ஆங்கில எழுத்தில் எழுதி முடித்து நிமிர்ந்த போதுதான் அச்செய்தி குண்டாய் விழுந்தது அவர் மீது. ஆமாம் அரசு சார்ந்த எந்தவொரு தொடர்பு சாதனமும் தாய்மொழியான ஜெர்மனில் மட்டுமே இருக்க வேண்டும். என்பதுதான் அது. நீண்ட பெருமூச்சுடன் அதனை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்து முடித்தார். அகில உலக மருத்துவக் குழுவுக்கு அவ்வறிக்கையை சமர்ப்பித்து விட்டு முடிவிற்காகக் காத்திருந்தார்.

“லியோ கேனரின்” ஆய்வறிக்கை சற்று விநோதமான நடவடிக்கைகள் கொண்ட எட்டுச் சிறுவர்கள் மற்றும் மூன்று சிறுமிகள் கொண்ட குழுவை நீண்ட நாட்களாகக் கண்காணித்து இவ்வறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

1. இவர்களுக்கு பேச்சு சாதாரணமாக இல்லை.
2. அர்த்தம் கொண்ட முழுத் தொடராக தொடர்ந்து இரண்டு, மூன்று வாக்கியங்கள் பேச முடியவில்லை.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# உளவியல் மையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி




உளவியல் ஆலோசனை மையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், சாதனையாளர்கள் கௌரவிப்பும் 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு ஊறணி கிரிபோஜன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

உளவியல் ஆலோசனை மையத்தில் தன்னார்வ சேவையாளர்களாக இணைந்தவர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றியவர்களுக்கு சான்றிதழ்களும், அடையாள அட்டைகளும்வழங்கி வைக்கப்பட்டதுடன், வாழ்நாள் சாதனையாளர்கள், மற்றும் சிறந்த சேவையாளர்களுக்கான விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வு உளவியல் ஆலோசனை மையத்தின் செயலாளர் ரனிசியன் தலைமையில் இடம்பெற்றது.

வாழ்நாள் சாதனையாளர்களான பேராசிரியர் சி.மௌனகுரு, ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண காணி ஆணையாளர்க. குருநாதன், ஓய்வுபெற்ற மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.மனோகரன், அருட்தந்தை போல் சற்குணநாயகம் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்குபிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## நான் ஆத்திகனா நாத்திகனா நீ மட்டுமே அறிவாய்

முக்கண்ணன் எங்கள் சிவன்
முழுமனதில் நீயும் நினை
எக்கணமும் எச்செயலும் அவனென்றே
எப்போதும் எண்ணித்துணி

இறைமீதும் செயல் மீதும்
எண்ணத்தின் வழி நடந்தால்
எப்போதும் உயர்வுனக்கே
கறை படியும் மனதிருந்தால்
காலமெலாம் துன்பங்கள்

உண்மையிலும் உயர் நேர்மையிலும்
உனக்குண்டு உயர்வாழ்வு
பொய் களவு வஞ்சகத்தோர்
வாழ்வதில்லை இன்பமாக

எளிமைதான் நாகரிகம்
என்றுணரும் மனிதருக்குள்
இயற்றுமறம் ஓங்கி விட்டால்
இன்னல்தான் துடைப்பவன் நீ

உன்னை எப்போதுமெண்ணி
என் வாழ்வு
தப்பாகும் ஆலயத்தில்
என் தடங்கள் காணாது

--- பொத்துவில் வில்லூர்பாரதி ---

# விளையாட்டு

## இளம் வயதிலேயே கால்பந்தாட்ட வீரனாகப் பிரகாசித்த லிகாரி பீற்றஸ் - ஓர் அஞ்சலிக் குறிப்பு



ஏழு தசாப்த வரலாற்றைக் கொண்ட மட்டக்களப்பின் கால்பந்தாட்டம் கடந்த வாரத்தில் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரனை இழந்து நிற்கின்றது. கூளாவடி டிஸ்கோ கழகத்தின் முக்கியமான வீரனாகத் திகழ்ந்த திரு.லிகாரி பீற்றஸ் அவர்கள் கடந்த மார்ச் 28 ஆந் திகதி திடீரென இயற்கையெய்தி விட்டார். இவருடைய மறைவு சம காலத்தில் மட்டுநகரின் கால்பந்தாட்டத் துறையோடு சம்பந்தப்பட்ட சகலரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

திரு லிகாரி பீற்றஸ் அவர்கள் லிகோ என்று மட்டுநகரின் கால்பந்தாட்டச் சூழலில் அழைக்கப்பட்டவர். தனது 17 ஆவது வயதில் டிஸ்கோ கழகத்தின் கால்பந்தாட்ட அணியில் களமாடியவர். டிஸ்கோ கழகத்தின் பிரபலமான மூத்த வீரர்களுடன் இணைந்து போட்டிகளில்

**து.கௌரீஸ்வரன்**

பங்குபற்றியவர். 1990 களில் மட்டுநகரின் தலைசிறந்த கால்பந்தாட்ட அணியாகத் திகழ்ந்த டிஸ்கோ கழக வீரர்களின் ஆற்றுகைகளைப் பார்த்து வளர்ந்தவன். விசேடமாக மட்டுநகரின் சிறந்த கால்பந்தாட்ட வீரனாகப் பிரகாசித்த ரவீஸ் அவுட்ஸ்கோன் அவர்களின் பயிற்றுவிப்பில் உருவானவன். இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட தெரிவு அணியில் மிக இளம் வயதிலேயே இடம்பிடித்தவர். பல வருடங்கள் மாவட்டத் தெரிவு வீரனாக மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் மட்டக்களப்பிற்காக களமாடிவர்.

லிகோ மட்.புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் கல்விகற்ற காலத்திலும் சிறந்த கால்பந்தாட்ட வீரனாக விளங்கியவர். புனித மிக்கேல் பாடசாலையின் கால்பந்தாட்ட அணி மாகாண. தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி வாகை சூடுவதற்கு காரணமாக விளங்கியவர்.

டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் வரலாற்றில் கடந்த இரண்டு தசாப்த காலமாக கால்பந்தாட்டம் ஆடி வரும் லிகோ தனக்கு அடுத்த தலைமுறையினருக்கு தான் மூத்த வீரர்களிடமிருந்து கற்றுக் கொண்ட கால்பந்தாட்ட வித்தைகளைப் பகிரும் சிரேஸ்ட வீரனாக இயங்க வேண்டிய காலத்தில் காலனால் காவு கொள்ளப்பட்டமை மிகவும் துரதிஸ்டமானதாக உணரப்படுகின்றது.

கடந்த இரு தசாப்த கால மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் டிஸ்கோ கழகத்தின் பல்வேறு சாதனைகளில் லிகோவின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது. டிஸ்கோவுடன் போட்டியிடும் அணிகள் லிகோவின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்தும் உபாயங்களைத் திட்டமிடுவதனைக் கண்டுள்ளோம். இரசிகர்கள் லிகோ விளையாடுகிறானா? என விழிப்பதைக் கேட்டுள்ளோம். இந்தளவிற்கு லிகோ ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரனாகப் பிரகாசித்தான்.

இவ்வாறு மட்டு நகரின் கால்பந்தாட்டத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த லிகோ எனும் தாரகை திடீரெனத் தன் பிரகாசத்தை நிறுத்தியமை பெரும் துன்பியல் நிகழ்வே.

லிகோவின் பிரிவால் துயரடையும் அவருடைய மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சகோதரர்களுக்கும் கடவுள் ஆறுதல் வழங்க வேண்டி, லிகோவின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திப்போம்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## கிழக்கு மாகாண கட்டத்தளபதி சவால் வெற்றிக் கிண்ணத்தை மட்டக்களப்பு உதைப்பந்தாட்ட கழகம் வென்றது




(வவுணதீவு நிருபர் )

மட்டக்களப்பில் நடைபெற்ற கிழக்கு மாகாண கட்டத்தளபதி சவால் கிண்ணம் 2019 வெற்றிக் கிண்ணத்தை



மட்டக்களப்பு உதைப்பந்தாட்ட கழகம் சுவீகரித்துக்கொண்டது .

கிழக்கு மாகாண இராணுவத்தின் அனுசரணையில் கடந்த மார்ச் 10 ஆம் திகதி முதல் மட்டக்களப்பு, காத்தான்குடி, அம்பாறை, கல்குடா, ஓட்டமாவடி, கிண்ணியா, திருகோணமலை, அக்கரைப்பற்று, ஆகிய இடங்களில் உள்ள உதைப்பந்தாட்ட கழகங்களில் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட உதைப்பந்தாட்ட கழகங்களை உள்ளடக்கியதாக லீக் முறையில் நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி சவால் கிண்ணம் 2019 உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி போட்டி ஞாயிற்றுக்கிமை பிற்பகல் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி போட்டிக்கு தெரிவான அம்பாறை உதைப்பந்தாட்ட கழக அணியும் மட்டக்களப்பு உதைப்பந்தாட்ட கழக அணியும் மோதிக்கொண்டன. நடைபெற்ற இறுதிப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை இராணுவ தளபதி லெப்டினல் ஜெனரல் மகேஷ் சேனாநாயக கலந்துகொண்டார்

ஆரம்ப நிகழ்வாக அதிதிகளுக்கு விளையாட்டு வீரர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது.


அறிமுக நிகழ்வினை தொடர்ந்து அம்பாறை - மட்டக்களப்பு ஆகிய அணிகளுக்கிடையே போட்டி ஆரம்பமானது. இரு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதி போட்டியில் ஒன்றுக்கு பூஜ்யம் (1.0) என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு உதைப்பந்தாட்ட கழகம் வெற்றிப்பெற்றது

வெற்றிப்பெற்ற மட்டக்களப்பு உதைப்பந்தாட்ட கழக அணி கிழக்கு மாகாண கட்டத்தளபதி சவால் கிண்ணம் 2019 வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது .

இரண்டாம் இடத்தினை அம்பாறை உதைப்பந்தாட்ட கழகமும், மூன்றாம் இடத்தினை கிண்ணியா உதைப்பந்தாட்ட கழகமும் பெற்றுக்கொண்டன.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பாதுகாப்பு படை தளபதி மேஜர் ஜெனரல் அருணா ஜயசேகர, கிழக்கு மாகாண ஆளுநர் எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அலி சாஹிர் மௌலானா, மாவட்ட அரசாங்க அதிபர் எம். உதயகுமார், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் இமானுவேல் கிறிஸ்டியன் நோயல், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா, கோட்டமுனை பள்ளிவாசல் மௌலவி ஜே.எம்.இலியாஸ், மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் கிழக்கு மாகாண இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தில்ஹார மீது குற்றச்சாட்டு



இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் வீரர் தில்ஹார லொகுஹெட்டிகே மீது சர்வதேச கிரிக்கட் கவுன்சிலின் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆட்டத்தை முன்கூட்டியே நிர்ணயிக்கும் சதி உட்பட மூன்று குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

அதன்படி தில்ஹார லொகுஹெட்டிகே ஏப்ரல் 03ம் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் இது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கட் கவுன்சில் கூறியுள்ளது.

சர்வதேச கிரிக்கட் கவுன்சில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் –

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

இந்த வாரம், வினாத்தாள் II (தமிழ் II)இல் மூன்றாவதாக வரும் கட்டுரை வினாவை நோக்குவோம். இதில் 5 தலைப்புக்கள் தரப்பட்டிருக்கும். இவற்றுள் யாதேனும் ஒன்றைப் பற்றி 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுதல் வேண்டும். இதற்குரிய புள்ளி 25 ஆகும். இது, மாதிரிவினா என்பதைக் கவனத்திற்கொள்க.

- கட்டுரை எழுதும் போது, தலைப்பை விட்டு விலகாதவாறு முன்னுரையையும் உள்ளுரையையும் முடிவுரையையும் அமைத்துக்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.
- பந்தியமைப்பு பொருத்தமாக இருத்தல் வேண்டும்.
- பந்திகளுக்கிடையே தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சொற்களின் எண்ணிக்கை விடயத்திலும் கவனம் செலுத்துதல் வேண்டும். குறித்த தலைப்புக்குரிய விடயம் நமக்கு நன்றாகத் தெரியும் என்பதற்காக சொல்லளவினைக் கவனத்திற் கொள்ளாதுவிடக்கூடாது.
- தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.
- வாக்கிய இயைபு, எழுத்துப் பிழையற்ற தன்மை, பொருத்தமான சொல்லிடைவெளி, பந்தி தொடங்கும் இடம் என்பன கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.
- தலைப்புக்கேற்ற பொருள், விடயத்தை எடுத்துச் சொல்லும் விதம் அதாவது மொழிநடை என்பனவற்றில் கூடுதலாகக் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- இந்த விதமாக ஒரு கட்டுரையை எழுத வேண்டுமென்றால் தேடல் மிகமிக அவசியம். நல்ல கட்டுரைகளை வாசிக்க வேண்டும். சிறந்த பேச்சுக்களைக் கேட்க வேண்டும். மேற்கோள் காட்டும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.
    - ► நல்ல கட்டுரையை எழுத வேண்டுமானால் முதலில் எடுத்த எடுப்பிலேயே கட்டுரையை எழுதாமல் கட்டுரைத் தலைப்புக்குரிய முகவுரையை எழுதிப்பாருங்கள்.
    - ► வெவ்வேறு வகையில் அமைந்த கட்டுரைத் தலைப்புக்குரிய முகவுரையை எழுதிப்பாருங்கள்.
    - ► அம்முகவுரை, உரியவாறு அமையும் வரை எழுதிப்பாருங்கள்.
- மட்/ஐயன்கேணி தமிழ் வித்தியாலய மாணவி ஒருத்தி எழுதிய முகவுரையைப் பாருங்கள். அம்முகவுரை, சிறு திருத்தத்துடன் இங்கு தரப்பட்டுள்ளது. அது நன்றாக இருக்கிறதா என்று பாருங்கள். பிடித்திருந்தாலும் பிடித்திருக்காவிட்டாலும் இதற்கான காரணத்தை முன்வையுங்கள். இதை இன்னொரு கோணத்தில் மாற்றி எழுதிப்பாருங்கள். வெற்றி பெறலாம். முயற்றி செய்தவன் இகழ்ச்சியே அடைந்ததில்லை.

### தோல்வியிற் கலங்கேல்

வாழ்க்கைப் புத்தகத்தில் வெற்றிப் பக்கமும் உண்டு தோல்விப் பக்கமும் உண்டு. வெற்றிப் பக்கத்தை மட்டுமே ஒருவன் புரட்டியிருந்தால் அவன் வாழவில்லை என்று அர்த்தம். இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. தோல்வியைக் கண்டு ஓடாமல் அதைத் துரத்த வழிகாண வேண்டும். தோல்வி என்பது, உன்னைத் தூங்கவைப்பதற்காகத் தாய் பாடும் தாலாட்டல்ல. மாறாக உனது நெஞ்சை நிமிர்த்திக்கொள்ள இசைக்கப்படும் தேசிய கீதம் என்பதை மறந்துவிடாதே. இதைச் சொன்னவன் கொடுங்கோலனாக இருக்கலாம். ஆனால் அவன் சொன்ன விடயம், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் ஆயுத வாக்கியம். "மெய்ப் பொருள் காண்பதானே அறிவு". ஆக, தோல்வி என்பது நாம் கலங்குவதற்கான ஒன்றல்ல. நாம் துலங்குவதற்கான வழி என்று நினைத்துச் செயற்படுவோமாக.

### செய்ந்நன்றி மறவாமை

எந்த மனிதனும் இந்த உலகில் தனித்து வாழ்ந்துவிட முடியாது. ஒருவரை ஒருவர் புரிந்து ஒருவருக்கொருவர் உதவிசெய்தே வாழ வேண்டும். செய்யப்படும் உதவிகள் நீரில் எழுதப்பட்ட எழுத்துக்களாக இருந்துவிடக்கூடா. கல்லில் எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரினதும் வளர்ச்சியில் யார் யார் பங்குதாரர்களோ அவர்களை மறந்துவிடக்கூடாது. "மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம் ஆனால், தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது. வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது. செய்ந்நன்றி மறந்தால் வாழ்க்கை பூச்சியம் என்பதை நினைத்து வாழ்வோம்.

- ■ இப்படியாகத் தலைப்புக்களைத் தெரிந்தெடுத்து, மேற்குறித்தவாறு, பொருத்தமான முன்னுரைகளை இவற்றைவிட மிகச் சிறப்பாக எழுதிப் பழகி நல்ல கட்டுரைகளை எழுதுங்கள்.

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

50. புரதங்களில் பெப்ரைட் பிணைப்புகள் இருப்பதைக் கண்டறியப் பயன்படுத்தும் பரிசோதனை ஒன்றைக் குறிப்பிட்டு, அச் சோதனையை விளக்குக.
    பையூரற் சோதனை (Biuret Test)

**பையூரற் சோதனை**


ஒரு சோதனைக் குழாயில் 2cm3 புரதத்தொங்கல் ஒன்றை எடுத்து, அதற்குச் சம கனவ ளவான 5% KOH கரைசலைச் சேர்த்து நன்றாகக் குலுக்கிய பின்னர், அதற்கு 1% Cu SO4 கரைசலின் 2 துளிகளைச் சேர்க்க, ஓர் ஊதாநிறம் தோன்றும்.


51. புரதக் கட்டமைப்புகளின் மட்டங்கள் யாவை?
    தமது தொழிற்பாடுகளில் முக்கியமான பங்களிப்புக்களை வழங்கும் கட்டமைப்பின் நான்கு மட்டங்கள் உண்டு.
    a) முதலான கட்டமைப்பு
    b) துணையான கட்டமைப்பு
    c) புடையான கட்டமைப்பு
    d) புடைச்சிறைக் கட்டமைப்பு

52. புரதங்களின் கட்டமைப்பு மட்டங்களை விபரிக்க.
    a) முதலான கட்டமைப்பு (Primary structure)
    பெப்தைட்டு பிணைப்புகளினால் நேரான தொடரொழுங்கில் அடுக்கப்பட்ட அமினோவமிலங்களின் தனித்துவமான தொடரொழுங்கு புரதங்களின் முதலான கட்டமைப்பாகும்.

    b) துணையான கட்டமைப்பு (Secondary structure)
    ஒட்சிசன் அணுக்களுக்கிடையிலான மூலக்கூற்றுக்குள்ளான ஐதரசன் பிணைப்புகளும், அதே பல்பெப்தைட்டு முதுகெலும்புச் சங்கிலியின் நைதரசன் அணுக்களுடன் இணைக்கப்பட்ட ஐதரசன் பிணைப்புக்களும் பிணைப்படைவதன் பயனாக ஒரு தனியான பல்பெப்தைட்டுச் சங்கிலி சுருளடைந்தும் மடிந்தும் துணையான கட்டமைப்பைத் தோற்றுவிக்கின்றது. . இது β மடிப்படைந்ததாக அல்லது அல்பா சுருண்டதாகக் காணப்படும்.

- அல்பா சுருளி(Alpha helix) – உ + ம் கெரற்றின்
- β மடிப்படைந்த தகடு – உ + ம் சிலந்தியின் பட்டுநார்.




புரதங்களின் துணையான கட்டமைப்புக்களின் பீற்றா மடிப்படைந்த தகடும் அல்பா சுருளியும்

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

## வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் 22

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# வனவாசச் சடங்கு–தொடர்ச்சி

அத்தினாபுரத்தினின்று சூதாடித் தோற்று பாண்டவரும், திரௌபதியும் வனவாசம் சென்றமையையும், அங்கு



வீமன் காய்கனிகளை வனங்களினின்று பெற்று ஐவருக்கும் அளித்தமையையும் , பின்னர் 12 வருடம் வனவாசம் முடிந்து 1 வருடம் அஞ்ஞாதவாசம் இருந்தமையையும் இவர்கள் அபிநயித்துக் காட்டுதலே வனவாசம் என்னும் 16ஆம் சடங்கு நிகழ்ச்சியாகும். இச்சடங்கு பகலில்தான் நடைபெறும். திரௌபதை அம்மன் கோயிலும், மேற்குறிப்பிட்ட 4 ஊர்க்கோயில்களும், ஊர்வளவுகளும், வீதிகளும், சந்திகளுமே இந் நாடகம் நிகழிடமாகும். ஊர்மக்கள் அனைவரும் இச்சடங்கில் பார்வையாளராயும், பங்காளராயும் ஒரே நேரத்திற் செயற் படுகின்றனர்.

17ஆம் சடங்கு தவநிலை எனப்படும் சடங்காகும். வனவாசச் சடங்கின்போது தருமரும் வீமனும் முக்கிய இடத்தினைப் பெற இங்கு தருமருடன் அருச்சுனன் முக்கிய இடத்தினைப் பெறுகிறான். அன்றைய சடங்கில் திரௌபதி அம்மன் கோயில் முன்றலில் நிற்கும் பெரிய மரமொன்றில் உச்சியில் கூடு கட்டி அதற்கு ஏற ஏணியும் அமைத்திருப்பர். அன்றிரவு 12 மணிவரை ஏனைய தெய்வங்கள் எல்லாம் ஆடி முடித்தபின்னர் அருச்சுனனுக்கு ஆடுபவர் தவநிலைக்குப் போகப் புறப்படுவார். காவியுடையணிந்து, பூசாரிமார் பாட, அருச்சுனன் கோயிலை விட்டு வெளியே வருவார். அந்நேரம் தருமர் கோயிலின் சந்தன மண்டபத்துள் இருப்பார். அருச்சுனன் வந்து தருமரை 3 முறை வணங்கி ஆடியதும் பாடல் பாடப்படும். அருச்சுனன் பாடுவது போல இப்பாடல் அமையும்.

ஆண்டி வடி வெடுத்து சந்நியாசி ஆகி
நான் அரியதவம் போறன் அண்ணை.

என்ற பாடலுக்குத் தருமர் தலை அசைத்துச் சிவனிடம் சென்று வரம் பெற்று வரச் சொல்லி அனுப்புவார். அருச்சுனன் அங்கிருந்து வெளிக்கிட்டு கோயில் வீதியை அடைந்து, தவநிலைக்குப் போகும் வழியில் பேரண்டச்சி வந்து வழி மறிப்பாள். பேரண்டச்சிக்கு வருபவர் முகத்திலே ஒப்பனை செய்து பேரண்டச்சி போன்ற உருவம் பூண்டு (பெரும்பாலும் இது வடமோடிக் கூத்தில் வரும் அரக்கர் அணியும் உடுப்புகளைப் போல அமையும்.) வந்து அருச்சுனனை வழி மறிப்பாள். வழிமறிக்கும் அரக்கி பின்வருமாறுபாடுவாள்.

மார்பைப் பார் தோளைப் பார் சந்நாசி
சந்நாசி – என் வண்ணமுகம் நீர் பாரும்.

தோளோடு தோளணைத்து சந்நாசி
சந்நாசி சுகமுத்தம் தாருமய்யா. ஐயா நீ

ஓரிரவு நீயிருந்து சந்நாசி சந்நாசி
உறங்கியிருந்து போங்காணும்.

கட்டிலுண்டு மெத்தையுண்டு சந்நாசி சந்நாசி கால்பிடிக்கத் தாதியுண்டு என்ற பாடலைப்பாடி பேரண்டச்சி அருச்சுனனை மறிக்க அருச்சுனன் பின்வருமாறு அதற்கு உத்தாரம் கூறுவான்:

என்னதான் சொன்னாலும் சண்டாளி சண்டாளி

ஏறெடுத்துப் பாரண்டி அடி நான்

ஆதி கைலாசம் சந்நாசி சந்நாசி
அரன்பதிக்குப் போறனடி

போற வழி தனிலே சண்டாளி சண்டாளி

பிழைகேடு செய்யாதடி

இப்பாடலுக்குத் தக அருச்சுனனுக்கு வேடம் பூண்டவர் ஆட்டமும் ஆடுவார்.

பேரண்டச்சி மறித்து ஆடுவாள். இவர் மறுப்பார். இறுதியில் அருச்சுனன் அம்புவிடுவது போல பாவனை செய்ய பேரண்டச்சி ஓடிவிடுவாள். பின்னர் அருச்சுனன் தவநிலை நோக்கிச் செல்லு கையில் பன்றியாக வேடமிட்டு ஒருவர் வந்து அருச்சுனனை மறிப் பார். (பாரதக் கதையில் சிவன் பன்றியை விட்டமை இங்கு நினைவு கூரப்படுகிறது). பன்றியாக உருவம் பூண்டு வருபவர் பாடுவதில்லை. அருச்சுனனுக்கு முன்னால் பன்றி அங்கும் இங்கும் ஓடும். தவநிலை நோக்கி அருச்சுனன் செல்வார். அச்சமயம் அருச்சுனனுக்குப் பின்னாற் செல்லும் பூசகர்களும் பாடகர்களும் பின்வரும் பாடல்களைப் பாடிச் செல்வர்.

முன்னழகு கண்டாலோ
அருச்சுனப் பெருமாள் முன் தொடர்வார்
ஆயிரம் பேர் பின்னழகு கண்டாலோ
அருச்சுனப் பெருமாள் பின் தொடர்வோர்
ஆயிரம்பேர்"

இறுதியில் பன்றிமீது அருச்சுனன் அம்பு எய்து விட்டு ஏணியில் ஏறிச் சென்று தவநிலையில் நிற்பார். நின்று பதிகம் பாடுவார்."

தத்துவபோத ஞான
சமய நூல் பலவும் கற்றேன்
புத்திபோல் உன் சீர்பாதம்
புரிந்து நான் பேறு பெற்றேன்
முத்தியே தருவாய் ஆதி
முதல்வனே நமச்சிவாயம்.

இப்பாடல்களைப் படித்து முடித்த பின்னர் சங்கினை எடுத்து ஊதி மணியும் அடித்துவிட்டு கீழே இறங்கி வருவார். (இங்கு சிவன் வருதல், மற்போர் புரிதல், பாசுபதாஸ்திரம் கொடுத்தல் எதுவும் அபிநயிக்கப்படுவதில்லை.) பின் வசந்த மண்டபத்தில் இருக்கும் அண்ணனிடம் செல்லுவார். சென்று நடந்த விடயத்தைக் கூறுவார். அதன் பின்னர் தருமர் தாம் இருந்த இடத்தைவிட்டு மகிழ்ச்சியுடன் எழும்புவார்.

(தொடரும்)




# மாற்றம் வரட்டுமே !

-அபிராமி யுவராஜன் -

வித்தியாசமாய் உணவுகள் தேடி
விதவிதமாய் நோய்களைச் சுமந்து
அநாவசிய செலவுகள் செய்கிறோம்
அத்தியாவசியம் ஆடம்பரமானதால்

அசை போட்டுச் சாப்பிட்டால்
ஆகாரம் சமித்து விடும்
அள்ளிப் போட்டு இறுக்கிவிட்டால்
அப்படியே நெருக்கி விடும்

சுத்தமாய்ச் சுகாதாரமாய்
உண்ண ஆசைதான்
சுவை நரம்புகள் நம்மைச்
சுரண்டாமல் இருந்தால்
அன்று
திட்டித் திட்டி நம் மூத்தவர்கள்
சொன்ன தெல்லாம் இன்று
கட்டிலில் காலாவதியாகிக்
கிடக்கும் போதே காதுக்குள் நுழைகிறது
என்ன பயன்? என்ன பயன்?

ஆரோக்கிய வாழ்வு
அறுசுவையில் மட்டுமில்லை
சீரான உணவு முறையிலுந்தான்
சிந்தித்து நீ உண்ணு!

சட்டமும் தரமானதுதான்
ஓர்கானிக் எனும் போது
பொறுப்புக்கள் நமக்குண்டு
பொருத்தமான தெரிவிற்கு

நுகர்வில் தவறு இருந்தால்
நுகர்வோர் சட்டத்தை நாடுங்கள்
உணவில் குறை இருந்தால்
உணவுச் சட்டத்தை நாடுங்கள்
எவையும் போதவில்லை என்றால்
மாற்றம் கொண்டு வாருங்கள்
முதலில் உங்களிடமிருந்து !



தொடர்ச்சி...

## 'புதிய ஆசிரிய ஆலோசகர் சேவை ஏப்ரல் 30க்குள் சாத்தியம்!' --- கல்வி அமைச்சர்

அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அநேகமாக ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் அது சாத்தியமாகலாம்' என்று உறுதியளித்தார்.

'சேவை அமுலாக்கப்படும்வரை தமது போராட்டம் தொடரும்' என தூதுக்குழுவினர் கூறி விடைபெற்றனர்.

தமக்கான இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையொன்றை ஸ்தாபிக்கவேண்டும் எனக்கோரி கடந்த 2019.02.21ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் ஆசிரிய ஆலோசகர்கள் தொடர்ச்சியாக பணிப்பகிஸ்கரிப்புப் போராட்டத்திலீடுபட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது ஆசிரிய ஆலோசகர்களுக்கான ஒரு சேவையை உருவாக்குதல், அவர்களுக்கான சிறப்புக் கொடுப்பனவை வழங்கல், அந்த சேவைக்கான ஒரு அந்தஸ்தை ஏற்படுத்தல் ஆகிய விடயங்கள் குறித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு புது வருடத்தில் அங்கீகாரம் பெற்று அவற்றை ஆசிரிய ஆலோசகர்கள் விடயத்தில் அமுல்படுத்த கல்வி அமைச்சர் உறுதியளித்ததாக இந்தச் சந்திப்புக்கான ஏற்பாட்டைச் செய்தவர்களில் ஒருவரான நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக்ராஜ் "அரங்கம்" பத்திரிகையிடம் தெரிவித்தார்.

தொடர்ச்சி...

## சிங்களமும் தமிழும் - ஒரு உறவு ஆராய்ச்சி

**என்றாகின. அம்மா, அக்கா இரண்டும் தெளிவான தமிழ் வழக்குகள். சிங்கள தாத்தா? அதுவும் தமிழ் வழக்கே. தமிழில் தாத்தா பெற்றோருக்கும் முந்திய தலைமுறை ஆணையே குறிக்கப் பயன்படுகிறது. அதற்கும் ''தாதை'' என்ற தந்தையைக் குறிக்கும் தமிழ்ச்சொல்லுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.**

**எஞ்சியிருக்கும் சொற்களில் 'மல்லி' என்பதன் வேர்ச்சொல்லைக் காணமுடியவில்லை. ஆனால் மள்ளன் என்ற சொல்லுக்கு தமிழில் இளைஞன் என்றொரு அர்த்தம் உள்ளது. இளைய வயதினன் எனப் பொருள்படும் அச்சொல்லுக்கும், சிங்கள 'மல்லி'க்கும் தொடர்பிருக்கலாம். வடமொழியில் அத்தகைய சொல்லொன்று இல்லை.**
**இனி ஐயாவுக்கும் நங்கிக்கும் போனால், ஐயன், தமிழில் தந்தை, அண்ணன், தலைவன் ஆகிய மூன்று முதன்மையான அர்த்தங்களைக் கொண்ட சொல். நங்கி, நங்கை என்பதன் திரிபு. முன்பே பார்த்தது போல், அதற்கு இரண்டு முதன்மையான அர்த்தங்கள். நம்+அங்கை என்பதால், தம்+அங்கை = தங்கையையும் குறிக்கும், மரியாதைக்குரிய இன்னொரு இளம்பெண்ணையும் குறிக்கும்.**

**சிங்கள உறவுச்சொற்களுக்கும் தமிழ் உறவுச் சொற்களுக்கும் உள்ள உறவு அவ்வளவும் தான்.**

தொடர்ச்சி...

## மூன்று நிறுவனங்களிடம் இருந்து 100 மெகாவட் மின்சாரத்தை ...



தனியார் மின்சார விநியோகஸ்தர்களிடம் இருந்து அடுத்த 6 மாதங்களுக்கு அலகுக்கு ரூபாய் 28 – 30 வரை செலுத்தி மின்சார சபை வாங்கவுள்ளது.

இந்த 100 மெகாவட்ஸ் மின்சாரத்தைக் கொண்டு மின்விநியோகத்தை நாடளாவிய ரீதியில் மின்சார சபையால் தொடர்ச்சியாக வழங்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதான மின் விநியோகத்துக்கு பதிலாக மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு ரூபாய் 36ஐ வழங்க தயாராக இருப்பதாகவும் மின்சாரசபை அறிவித்துள்ளது.

சூரிய சக்தியை பயன்படுத்தும் சிறிய நிறுவனங்களிடம் இருந்து அலகு ஒன்றுக்கு ரூபாய் 16 வீதம் மின்சாரத்தை வாங்கவும் அது தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி...

## உளவியல் மையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

உதயகுமார் அவர்களும் மற்றும் ஏனைய அதிதிகளாக வி.ஜி.டி.ஏ.கருணாரத்ன (மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர்), மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி கலாரஞ்சினி கணேசலிங்கம், கிழக்குபல்கலைக்கழக பிரதி உப வேந்தர் கே.ஈ.கே.கருணாகரன், மனிதஉரிமை அமைப்பின் பணிப்பாளர் பேராசிரியர் ஜெயந்த களுவோவில, மட்டகக்ளப்பு மாநகரசபை ஆணையாளர் கே.சித்திரவேல், யூட் பியோ நவிந்தன் (வேல்ட்விஷன்), எழுத்தாளர் உமாவரதராஜன், கனிசியஸ் மக்ஸ்வெல் ஒக்கஸ் (உளவியல் ஆலாசனை நிலையம்), சிந்தாத்துரை பெஞ்சமின் (வேல்ட்விஷன்) ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

உளவியல் ஆலாசனைமையத்தின் சேவையாளரான கஜானா சந்திரபோஸ் அவர்கள் இயக்கி, நடடித்த தற்கொலை தொடர்பான விழிப்புணர்வு குறும்படமும் இந் நிகழ்வில் வெளியீட்டுவைக்கப் பட்டதுடன்செல்விகஜானாவிற்குஉளவியல்ஆலோசனை மய்யத்தால் பாராட்டப்பட்டுவிருதும்வழங்கிவை க்கப்பட்டதுடன் பெண் எழுத்தாளர் திருமதி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வின் வரவேற்பு நடனத்தை நடன ஆசிரியை திருமதி வாசுகி பார்த்தீபன் தலைமையிலான மாணவிகள் வழங்கினர்.

தொடர்ச்சி...

## தீரனியன் – ஒரு பார்வை

3. காதில் விழுந்ததை உடனே எதிரொலிப்பது போல் பேச்சு உள்ளது.
4. ஒரே நடவடிக்கையை திரும்பத் திரும்பச் செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள்.
5. சமூகத்தோடு இணைந்து செயற்பட இயலாமை உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் "ஓட்டிசம்"; (Autism) என்று இந்நிலையை அழைக்கலாம். கிரேக்கச் சொல்லான "ஆட்டோ" என்பதற்கு "சுய" (Self) என்று பொருள். முழுமையாக சமுதாயத்திலிருந்து இவர்கள் விலகி நடப்பதால் இப்பெயர் பொருத்தமானதாக இருக்கும்.

டாக்டர் ஹேன்ஸ் அஸ்பேர்ஜரின் ஆய்வறிக்கை
சில குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணித்த போது தெரிய வந்தவை.
1.சமுதாயத்தில் கலந்துரையாடுவதில் பிரச்சினை உள்ளது.

2.கண்களை நேருக்கு நேராகப் பார்ப்ப தில்லை.

3.பேச்சு இருந்தாலும் சம்பந்த மில்லாமல் விநோதமாகப் பேசுகிறார்கள்.

இவர்களை "ஓட்டிஸ்ரிக் சைகோபாத்ஸ்" (Autistic Psychopaths) என்று கூறலாம். அதே சமயம் சமுதாயத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டுள்ளவர்கள் என்று பொருள்.

மேற்படி இரண்டு மருத்துவர்களின் கூற்றுப்படியும் சமுதாயத்திலிருந்து தனித்து பிரிந்து தெரியும் இவர்களை, "ஓட்டிச" நிலை உள்ளவர்கள் என்று கூறலாம். தமிழில் இந்நிலையை தற்சிந்தனையாளர்கள் அல்லது தற்புனைவு ஆள்வு என்கிறோம். இவர்கள் தங்களுக்கென ஒரு உலகத்தை உருவாக்கிக் கொண்டு அதிலேயே சஞ்சரிப்பவர்கள். எப்போதும் சிந்தனை வயப்பட்டிருப்பவர்கள். சமுதாயத்துடன் ஒட்டாமல் இருப்பவர்கள். அதனால் இப்பெயர்கள் தமிழில் கொடுக்கப்படுகின்றன.
மதி இறுக்கம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஆனால் 'ஓட்டிசம்' என்றால்தான் எல்லோருக்கும் எளிதில் விளங்கும். லியோ கேனரின் அறிக்கை உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் அஸ்பெர்ஜரின் ஆய்வறிக்கை மொழிப்பிரச்சினை காரணமாக கிடப்பில் போடப்பட்டது. பின்பு 1948ம் ஆண்டு இவர் இது குறித்து உரை நிகழ்த்திய போதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன் நிலைக்கு அஸ்பெர்ஜர் ஸிண்ட்ரோம் (Asperger's Syndrome) எனப் பெயரிடப்பட்டது.

"ஓட்டிசம்"; என்பது ஒரு குழந்தையின் இயல்பான வளர்ச்சி நிலையில் ஊடுருவி பரவக்கூடிய விருத்தி நிலை கோளாறுகள் எனப்படும்.

இக் குழந்தைகளில் இணங்காணப்படும் மிக முக்கிய மூன்று பிரச்சினைகள்

1. தொடர்பாடல் அல்லது கருத்துப் புலப்படுதல் பாதிக்கப்படுதல் (Communication Difficulties)

2. சமுதாய செயற்பாடுகள் பாதிக்கப்படுதல் ( Social Skills Difficulties );.

3.தனக்குத் தானே சுயமாகச் செய்யும் நடத்தைகள் (Self Stimulatory Behaviours)

அமெரிக்க உளவியல் சங்கம் இதுபோன்ற பண்புகளைக் கொண்ட ஆறு நிலைகளை ஒரே குடையின்கீழ் கொண்டு வருகிறது.

1. "ஓட்டிசம் ஸ்பெக்ட்ரம் டிஸ்ஓடர்" Autism Spectrum Disorder (ASD).

2. "ஓட்டிசம் டிஸ்ஓடர்" (Autism Disorder).

3. "அஸ்பெர்ஜர் டிஸ்ஓடர்" (Asperger's Disorder).

4. குழந்தைப் பருவ உருச்சிதைவுக் கோளாறுகள் (Childhood Disintegrative Disorder)

5. வளரும் பருவத்தில் ஊடுருவிப் பரவும் தன்மையுள்ள கோளாறுகள் (Pervasive Developmental Disorder)

6."ரீட்ஸ் டிஸ்ஓடர்" (Rett's Disorder)

இவை ஆறும் ஓட்டிசம் என்றுதான் அழைக்கப்படுகின்றன. இவற்றில் உயர் இயக்க நிலை (High Functional ASD) தாழ் இயக்க நிலை (Low Functional ASD) என்று இருவகையைச் சொல்லலாம். உயர் இயக்க நிலை ASD இல் ஓரளவு பேச்சாற்றல் கொண்டவர்கள், விளங்கிக்கொள்ளும் தன்மை கொண்டவர்கள் அடங்குவார்கள். பேச்சாற்றல் இல்லாது தன்னைத்தானே கடித்து காயப்படுத்திக்கொண்டு மிகவும் தனித்து இருப்பவர்கள், தாழ் இயக்க நிலை ASDயில் அடங்குவார்கள். உயர் இயக்க நிலை ASDக்கு "Asperger's Syndrome" (அஸ்பெர்ஜர் ஸிண்ட்ரோம்) என்று பெயர்.

தொடர்ச்சி...

## 'சுன்னாகம் மின் உற்பத்தி நிறுவனத்தால் மக்களுக்கு பாதிப்பு'

பிரைவட் லிமிட்ட் நிறுவனத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த 20 மில்லியன் ரூபா பணத்தை பாதிப்படைந்த ஒரு குடும்பத்திற்கு உயர்ந்த பட்ச நட்டஈடாக 40,000 ரூபா வீதம் பகிர்ந்து வழங்குமாறும் அதனை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் குழு ஒன்றின் தலைமையில் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக இருந்தால் மட்டுமே மீண்டும் குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இயற்கை ஆய்வு மையத்தின் தலைவர் ரவீந்திர காரியவசத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. குறித்த மனுவில் அந்த மின் உற்பத்தி நிலையத்தினால் வெளியாகும் கழிவுநீர், எண்ணை மற்றும் கிரீஸ் ஆகியவற்றினால் கிணற்று நீர் பாதிக்கப்படுவதாகவும் இதனால் மக்களின் அடிப்படை உரிமை மீறப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மனுவை கருத்திற் கொண்ட நீதிமன்றம் 2015 ஆம் ஆண்டு குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகளை நிறுத்துமாறு இடைக்கால தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**

Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd